# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/= இதழ் - 04 05.02.2023








06

அபிவிருத்திக்கான பாதையை சிக்கலாக்கிய நாணய நிதியம்





16

PNS நிறுவன உரிமையாளர் பிரியா நடேசன்









20

கால்நடைப் பண்ணைகள்





# நெய்தல் நகர் விடுமுறை இல்லங்கள்

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



**வடபகுதியில் உல்லாசப்பயணத்துறையின் வளர்ச்சியில் நெய்தல் கடற்கரை நகர் ஒரு முக்கிய திருப்பு முனையாக அமையும் என நம்பலாம். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பணிகளைக் கவரும் இடங்களில் ஒன்றாக இது வேகமாக மாற்றமடைந்து வருகின்றது. இங்கு விடுமுறை இல்லங்கள் இன்று திறக்கப்படுவது முக்கியமான மைல் கல்!**

## ஒரு புதிய அனுபவத்தை வழங்கும்

# நெய்தல் நகர் விடுமுறை இல்லங்கள்

## யாழ்ப்பாணத்து பாரம்பரியத்துடன் இன்று திறந்து வைக்கப்படுகின்றது

- பி.பவித்ரா -




ஆரோக்கியமான மனதுக்கு இனிய பொழுதுபோக்கு வசதிகளை வழங்கி வரும் நாவற்குழி நெய்தல் கடற்கரை நகரில் இன்று ஞாயிற்றுக்கிழமை (05-02-2023) தங்குமிட வசதிகளைக் கொண்ட விடு முறை இல்லங்கள் திறந்து வைக்கப்பட விருக்கின்றது. இதன்மூலம் இங்கு வருபவர்கள் சில நாள்களுக்கு தங்கிருந்து தமது விடுமுறையை குடும்பத்தினருடனோ நண்பர்களுடனோ மகிழ்ச்சியாகச் செலவிடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

நெய்தல் கடற்கரை நகர் அதன் இரண்டாவது கட்ட வளர்ச்சிக்கு இதன்மூலமாகச் செல்கின்றது.

வடபகுதியில் பலதரப்பட்ட வசதிகளுடன் கூடிய பரந்த பொழுதுபோக்கு இடம் ஒன்று இல்லை என்ற குறைபாட்டை போக்கும் வகையில் நெய்தல் கடற்கரை நகர் **Neithal Beach City** கடந்த வருடத்தில் திறந்துவைக்கப்பட்டது. வடபகுதியில் பிரபலமான ஒரு பொழுதுபோக்கு இடமாக இது மாற்றமடைவதற்கான அனைத்து அம்சங்களையும் கொண்டதாக அமைந்திருப்பது இதன் சிறப்பு.

ஆழம் குறைந்த - அலைகள் குறைவான அழகிய கடற்கரை, சோலை போல வளர்ந்திருக்கும் மரங்கள், மீன் பிடித்தல், படகோட்டம், வில் அம்பு எய்தல், துப்பாக்கி சுடுதல் போன்ற இன்னோரன்ன பொழுதுபோக்கு அம்சங்களுடன் மனதுக்கு ரம்பியமான இயற்கைக் காட்சிகளுடன் மக்களைக் கவரும் வகையில் நெய்தல் கடற்கரை நகர் அமைந்துள்ளது. இதன் மற்றொரு சிறப்பம்சம் அங்கு கிடைக்கும் யாழ்ப்பாண பாரம்பரிய உணவுகள். இவை அனைத்தையும் ஒரு சில நாட்களுக்கு அங்கேயே தங்கியிருந்து அனுபவிப்பதற்கு ஏற்றவாறு நவீன வசதிகளுடனான விடுமுறை இல்லங்கள் இன்று திறக்கப்படுகின்றது.

நெய்தல் கடற்கரை நகர் நாவற்குழி அம்மன்கோவில் வீதியில் இருபது ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதில், சுமார் பத்து ஏக்கர் நிலப்பரப்பு தனிப்பட்டவர்களுக்கு விடுமுறை இல்லங்களை அமைப்பதற்காக வழங்கப்பட்டிருக்கின்றது. அதில் அமைக்கப்பட்டிருக்கும் முதலா



வது தொகுதி விடுமுறை இல்லங்களே இன்று திறக்கப்படுகின்றது.

இங்குள்ள 20 ஏக்கர் நிலப்பரப்பில் மிகுதி பத்து ஏக்கர் கடற்கரை நகர் நிர்வா கத்தினரது பொறுப்பில் இருக்கின்றது. நெய்தல் நகரை பராமரிப்பதற்கான அலுவ லகம், நிகழ்வுகளை நடத்துவதற்கான மண்டபங்கள், உணவு விடுதி மற்றும் பொதுவான விளையாட்டுக்களுக்கான இடம் என்பனவற்றுக்காகவே இந்த பத்து ஏக்கர் நிலப்பரப்பை அவர்கள் வைத்துள் ளார்கள். அதாவது பொதுவான வசதிக ளுக்காக இந்த பத்து ஏக்கர் பயன்படுத்தப் படுகின்றது.

இதனைவிட தாஜ்மஹால், அமெரிக் காவில் உள்ளதைப் போன்ற லிபர்ட்டி சிலை போன்ற புகழ்பெற்ற உலக அதிச யங்களின் மாதிரிகளும் இங்கு அமைக் கப்பட்டிருக்கின்றன. இதனைவிட பிரமிட் களின் மாதிரிகள் சிலவற்றை அமைப்ப தற்கும் திட்டமிடப்பட்டிருக்கின்றது. நெய் தல் நகரின் முன்பக்கத்தில் அமைந்திருக் கும் கோவிலுக்கு அருகில் தஞ்சை பெரி யார் கோவிலின் மாதிரி ஒன்றை அமைப் பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கின்றது.

இவை அனைத்தும் இங்கு வருபவர்க ளுக்கு புதிய அனுபவத்தைக் கொடுப்ப தாக அமையும் என்பதுடன், திருமணத் துக்காக நிழற்படங்களை எடுக்க வருபவர் களையும் கவர்வதாக இருக்கும். இப் போது கூட இவ்வாறான படங்களை எடுப் பதற்கும், காணொளிகளைப் பதிவு செய்வ தற்காகவும் பெருமளவு இளைஞர்கள், யுவதிகள் படையெடுப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. யூ ரியுப்பில் பதிவுகளைச் செய்பவர்களுக்கும் நெய்தல் நகரில் சுவாரஸ்யமான பல விடயங்கள் கிடைக்கின்றது. அவர்களும் கிரமமாக வந்து செல்வதைக் காணமுடிகின்றது.

இங்கு தனிப்பட்டவர்களுக்கு வழங் கப்பட்ட காணிகளில் பலர் விடுமுறை இல் லங்களை அமைத்திருக்கின்றார்கள். ஒரு அறை, இரு அறைகளுடன் கூடிய இல்லங்கள் என இவை அமைக்கப்பட் டுள்ளன. சில இல்லங்கள் தனிப்பட்ட நீச்சல் தடாகங்களுடனும், மொட்டை மாடி போன்ற வசதிகளுடனும் அமைக் கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். மொட்டை மாடியிலிருந்து பார்க்கும் போது கடற்கரை யில் சூரியன் மறைவதைப் பார்த்து ரசிக்க முடியும்.

நெய்தல் நகரில் காணிகளைக் கொள் வனவு செய்து விடுமுறை இல்லங்களை அமைத்தவர்கள், அவர்கள் விரும்பினால் அங்கு வந்து தங்கிச் செல்ல முடியும். அல்



லது நிர்வாகத்தின் பொறுப்பில் அதனை ஒப்படைத்தால் நிர்வாகத்தினர் அதனை பராமரிப்பதுடன், அதன் மூலமாக கிடைக் கும் வருமானத்தில் குறிப்பிட்ட ஒரு வீதத்தை உரிமையாளர்களுக்குக் கொடுப் பார்கள்.

காணிகளை வாங்கி அதில் இல்லங் களை அமைத்தவர்களும் அதன்மூல மாக வருமானம் பெறத்தக்க வகையில் இதற்கான திட்டம் வகுக்கப்பட்டிருக்கின் றது.

தனியார்களுக்கு என ஒதுக்கப்பட்ட காணிகளில் பெரும்பாலும் அனைத்துமே விற்கப்பட்டுவிட்டது. சொத்து ஒன்றைக் கொள்வனவு செய்வதுடன், அதன் மூல மாக கணிசமான வருமானத்தையும் மாதாந்தம் பெற்றுக்கொள்ள முடியும் என்ற திட்டத்தினால் கவரப்பட்டு இதில் முதலீடு செய்வதில் பலரும் அக்கறை காட் டியதால்தான் இந்த காணிகள் அனைத் தும் விற்கப்பட்டுவிட்டன.

46 துண்டுகளாக இந்தக் காணிகள் விற்கப்பட்ட போது, சிலர் இரண்டு, மூன்று துண்டுகளையும் வாங்கியிருக்கின்றார் கள்.

இவ்வாறு காணித்துண்டுகள் தனிப் பட்டவர்களால் வாங்கப்பட்டு அமைக்கப பட்ட விடுமுறை இல்லங்களில் முதலா வது தொகுதிதான் இன்று திறக்கப்படுகின் றது.

ஏனைய இல்லங்களுக்கான கட்டு மாணப்பணிகளும் விரைவில் முடிவடை யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட் டில் தற்போது உருவாகியிருக்கும் பொரு ளாதார நெருக்கடி இந்தக் கட்டுமாணப் பணிகளின் தாமதத்துக்குக் காரணமா கச் சொல்லப்படுகின்றது.

நெய்தல் கடற்கரை நகரில் காணக் கூடியதாக இருக்கும் மற்றொரு முக்கிய மான அம்சம் இங்குள்ள பனம் பொருள் தொழிற்சாலைதான். நாவற்குழியும் அதனை அடுத்துள்ள பகுதிகளும் அதிக ளவுக்கு பனை மரங்களை கொண்டவை யாக இருப்பதால், இங்கு பனம் பொருள் தொழிற்சாலை ஒன்று அமைந்திருப்பது பொருத்தமான ஒன்றுதான்.

(18ஆம் பக்கம் பார்க்க)



**மின்மடல்** : tamilseconomy@gmail.com
**தொலைபேசி** : 0764438620

# மழையின் தாக்கம்

கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நிலவிவருவதனால் விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தைப்பொங்கலைத் தொடர்ந்து வயல்களில் அறுவடை காலமாக இருப்பதால், அறுவடைக்கு தயாராக இருந்த நெல், அறுவடை செய்யப்பட்டு காயவிடப்பட்டிருந்த நெல் என்பன பெருமளவுக்கு அழிவடைந்துள்ளன.

விவசாயிகள் கடந்த வருடங்களில் எதிர்கொண்ட நெருக்கடிகள் அனைவருக்கும் தெரிந்ததுதான். உரம், களை கொல்லிகள் இல்லாத நிலை, நீர் இறைப்பதற்குத் தேவையான எரிபொருள் இல்லாத அவலம் வேலை செய்பவர்களுக்கான வேதன உயர்வு. இவை போன்ற பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுதான் அவர்கள் வயலில் நெல்லை விதைத்து தமது கடும் உழைப்பின் பின்னர் இப்போது அறுவடைக்குத் தயாராக இருந்தார்கள்.

ஆனால், கடந்தவாரம் பெய்த காலம் பிந்திய தொடர்ச்சியான மழை விவசாயிகளுக்கு அனர்த்தத்தை ஏற்படுத்திச் சென்றிருக்கின்றது. அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்பட்ட நெற்பயிர்கள் சரிந்துள்ளதுடன், வயல்களுக்குள் நீர் அதிகளவுக்குத் தேங்கியுள்ளது. அதனைவிட அறுவடைக்குப் பின் வீதியோரங்களில் உலரவிடப்பட்டிருந்த பல தொன் எடையுள்ள நெல் முழுமையாக மழையில் நினைந்துள்ளது.

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் நெற்செய்கையில் ஈடுபட்ட மன்னார், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளைப் பொறுத்தவரையில், இப்போது இயற்கையும் அவர்களைப் பந்தாடியுள்ளது. இந்த நிலைமைகளைப் பயன்படுத்திக்கொண்டு வசதி படைத்த சிலர் அடிமாட்டு விலைக்கு இவர்களிடமிருந்து அவசரமாக நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள். அவர்களும் கிடைப்பது போதும் என்ற நிலையில் அவற்றை விற்றுவிடுவதில் அக்கறைகாட்டுகின்றார்கள்.

வடபகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்டிருக்கும் ஏழை விவசாயிகளின் பரிதாப நிலையை இது ஒருபுறத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றது. மறுபுறத்தில் இவ்வாறு பாதிக்கப்படும் விவசாயிகளின் நலன்களைப் பேணுவதற்கான கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இது உணர்த்தியிருக்கின்றது.

அண்மைக்காலத்தில் இயற்கையானதும், செயற்கையானதுமான காரணிகளால் விவசாயிகள் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றார்கள். இவ்வாறான பாதிப்புக்களால் விவசாயிகள் முடங்கிப்போய்விடாமல் இருப்பதை உறுதி செய்வது அவசியம்.

இந்த அழுத்தங்களுக்கு மத்தியிலும் விவசாயிகள் களத்தில் இறங்கியதால்தான் தற்போதைய பொருளாதார நெருக்கடியை நாம் எதிகொள்ள முடிகின்றது. அதிகமான விலை என்றாலும், உள்ளூர் உற்பத்திகளைப் பெறமுடிகின்றது. இயற்கை அனர்த்தங்கள் தவிர்க்க முடியாதவைதான். ஆனால், அதன் பாதிப்புக்கள் விவசாயிகளைத் தாக்கும் போது, அவர்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை வகுத்துக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை!

# அன்புள்ள ஆசிரியருக்கு.




## உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கம்

தமிழர் பொருண்மியம் வார இதழ் நண்பர் ஒருவர் மூலமாக எனது பார்வைக்கு கிடைத்தது. தமிழில் பல பத்திரிகைகள் வருகின்ற போதிலும், காலத்துக்கேற்ற பல விடயங்களைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்திருப்பது மகிழ்ச்சி.

உள்ளூர் உற்பத்தியாளர்களையும், தொழல்முனைவோரையும் ஊக்கப்படுத்தும் வகையில் உங்களுடைய முதலாவது இதழிலேயே பல ஆக்கங்கள் வெளிவந்திருப்பது பயனுள்ளது.

அவற்றை ஊக்குவிக்கும் தலையாய பணியை **தமிழர் பொருண்மியம்** முன்னெடுப்பது அதன் சமூகப் பொறுப்பை வெளிப்படுத்துகின்றது.

தொடர்ந்தும் வெளிவர வாழ்த்துகள்.

**என்.செல்வகுமார்**
**உருத்திரபுரம், கிளிநொச்சி.**

## பொஸிபிள் கிரீன் தயாரிப்புக்கள்

குறுகிய காலத்துக்குள் சாதிக்கும் பொஸிபிள் கிரீன் குறித்த உங்களுடைய கடந்த வார கட்டுரை என்னை ஆச்சரியப்படுத்தியது.

உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு இவ்வளவு உற்பத்திகளை முன்னெடுப்பது எமது வளங்களை எமக்கே உணர்த்துகின்றது.

இது போன்ற நிறுவனங்கள்தான் எமக்கு அவசியம். இது போன்ற பயனுள்ள விடயங்களை தமிழர் பொருண்மியம் தொடந்தும் வெளியிட வேண்டும்.

**ச.மதியாபரணம்,**
**கரவெட்டி.**

## சிறு கைத்தொழில் முயற்சி

தமிழர் பொருண்மியத்தின் கடந்த வார இதழில் வெளியான சிறுகைத் தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தி, அவர்களுக்கு வழிகாட்டியாக அமையக்கூடிய நேர்காணல் மிகவும் பயனுள்ளது.

சிறு கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகளையும், அவற்றுக்கு எவ்வாறு தீர்வைக்காண முடியும் என்பதையும் பிரதிப்பணிப்பாளர் தனஞ்செயன் தெளிவாக விளக்கியிருந்தார்.

அதனைவிட பஞ்சந்தாங்கி என்ற தலைப்பில் தமிழ்க்கவி எழுதிய மரவள்ளிக்கிழங்கு குறித்த கட்டுரையும் சிறப்பு.

சந்தை நிலைவரம், நாணய மாற்று விகிதம் என்பவற்றையும் நீங்கள் வெளியிட்டுவருவதும் பயனுள்ளது.

பணியைத் தொடர வாழ்த்துகள்

**சி.மணிமேகலை,**
**வவுனியா**

## தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...

தமிழர் பொருண்மியம் வாராந்தம் உங்கள் இல்லங்களுக்கு நேரடியாகப் பெற்றுக் கொள்ள சந்தாதாரராகுங்கள்.

**3 மாத சந்தாத் தொகை - 13 பிரதிகள் -** 1300/= **(தபால் செலவு உட்பட)**

**6 மாத சந்தாத் தொகை - 26 பிரதிகள் -** 2600/= ” ”

தொடர்புகளுக்கு - **076 443 8622**

தமிழர் பொருணியம்
வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
05.02.2023




இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் நேற்றைய சந்தை விலை 1,83,450 ரூபா.

24 கரட் தங்கம் 2,00,050 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.

# Northern Chamber of Industries

# Vacancy announcement

# Chief Executive Officer

We are looking for someone young energetic who is committed, proactive and versatile leader for the Position of Chief Executive Officer will be

**Position Objectives**

- He/she has full responsibility for the implementation of the German Asia Pacific Business Association OAV funded project, to coordinate with the Micro small and medium Entrepreneurs of Northern Region while developing new initiatives and partnerships with other business and community organizations to achieve regional goals and objectives;
- Committed to work in the field, maintain awareness of the landscape of the Northern Region Competent in riding motorbike, having driving license.

**Requirements**

- Education: Degree in Bachelor of Business administration preferred.
- Experience minimum of 5 years' in executive management and leadership position within the nonprofit sectors (NGOs, UN Interagency) demonstrating progressively greater responsibility will be considered in lieu of academic credential
- Excellent communication and Human resource management skills

An attractive remuneration will be offered to the selected candidate. Please post your application and the CV with two non-related referees within Ten (10) days and state the post applied for in the top of the envelop left hand corner and post to the below address.

Dead line for the application is Feb 10th of 2023

**The Chairman**
**Northern Chamber of Industries**
**No 54, Clock Tower Lane**
**Jaffna**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 240 |
| உருளைக்கிழங்கு | - 140 |
| பச்சைமிளகாய் | - 340 |
| தக்காளி | -250 |
| மரவள்ளிக்கிழங்கு | - 180 |
| கோவா | - 80 |
| கரட் | - 120 |
| பூசணி | - 80 |
| புடோல் | - 200 |
| வாழைக்காய் | - 160 |
| சின்ன வெங்காயம் | - 400 |
| பெரிய வெங்காயம் | - 180 |
| பாகற்காய் | - 250 |
| வெண்டக்காய் | - 250 |
| கருணைக்கிழங்கு | - 120 |
| பயற்றங்காய் | - 300 |
| லீக்ஸ் | - 320 |
| பீற்றூட் | - 160 |
| கறிமிளகாய் | - 600 |
| முருங்கைக்காய் | - 1800 |
| போஞ்சி | - 250 |




வாங்கும் விலை

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 255 |
| கனடா டொலர் - | 278 |
| சீன யுவான் - | 53 |
| யுரோ - | 394 |
| ஜப்பான் யென் - | 2.8 |
| சிங்கப்பூர்டொலர் - | 275 |
| ஸ்ரேலிங் பவுண் - | 444 |
| சுவிஸ் பிராங் - | 392 |
| அமெரிக்க டொலர் - | 360 |

விற்கும் விலை

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 267 |
| கனடா டொலர் - | 281 |
| சீன யுவான் - | 56 |
| யுரோ - | 410 |
| ஜப்பான் யென் - | 2.8 |
| சிங்கப்பூர் டொலர் | 285 |
| ஸ்ரோலிங் பவுண் - | 461 |
| சுவிஸ் பிராங் - | 412 |
| அமெரிக்க டொலா - | 371 |

# அபிவிருத்திக்கான பாதையை சிக்கலாக்கிய நாணய நிதியம்



**வங்காள பொருளியல் பேராசிரியர் அனு முஹமது நேர்காணல்**

நேர்கண்டவர் - கலாநிதி.சி.ஜெய்சங்கர்

> பொருளாதார மீட்சிக்காக டொலர்களில் வருவாயைப் பெறுவதற்காக தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் வேறு நாடுகளுக்கு குடியேற அனுமதிப்பது பயனுள்ளதா?

இலங்கை இதற்கு முன்னர் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுள்ளது, இது உண்மையான அபிவிருத்திக்கான பாதையை சிக்கலாக்கியது. பொதுவாக சர்வதேச நாணய நிதியம் ஒரு பிரச்சினையிலிருந்து மீள்வதற்கான அமைப்பல்ல. இது ஒரு கடன் வழங்கும் அமைப்பாகும், இது வெளிவாரி நிதிகளைப் பெறுவதற்கான வாய்ப்பைத் தருகின்றது என்று கூறுகின்றார் வங்காள பொருளியல் பேராசிரியர் அனு முஹமது. கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு கடந்த வாரம் வருகை தந்த பேராசிரியர், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே இந்தக் கருத்தை முன்வைத்தார். அவரது நேர்காணலின் முக்கியமான பகுதிகள் வருமாறு -

**கேள்வி -** தற்போதைய நெருக்கடிக்கு இலங்கையை வழிநடத்திய காரணிகள் எவை?

**பதில் -** அதிகாரச் செறிவு, செல்வச் செறிவு மற்றும் அதை மேலும் எடுத்துச் செல்லும் முயற்சிகள் நெருக்கடிக்கான அடிப்படைக் காரணங்கள் ஆகும். தவறான கொள்கைகள், எதேச்சாதிகார ஆட்சி, வளர்ச்சி பிடிவாதம், அதிக கடன் சுமை, பொதுப் பணத்தை வீணடித்தல், களவாடல் மற்றும் அந்நியச் செலாவணி கையிருப்பு மீதான அழுத்தம் ஆகியவை முறையற்ற முறையற்ற முகாமைத்துவத்தைத் தூண்டின.

இதனால், செலவு மற்றும் இலாபம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல் பெரிய கடன்களுடன் மிகப்பெரிய திட்டங்களைக் உருவாக்கி மகிழ்ச்சி காண்பதில் இருந்த அக்கறையும் அதன் ஒரு பகுதியாகும். இந்த திட்டங்கள் பல்வேறு குழுக்களுக்கு பெரும் லாபத்தை வட்டியாக அள்ளிச்சொரிந்தன், இது நாட்டின் மீது சுமையாக மாறியது. தொடர்ச்சியாக விலையை அதிகரிக்கும் விலைப்பட்டியல்கள் மூலம் மூலதனப்பிரச்சினைக்கு தீர்வு காண முனைந்தமை, மற்றும் நவ தாராளவாத உலகளாவிய எதேச்சதிகார எண்ணங்களும் இந்த நெருக்கடியை உருவாக்கியது.

விவசாயத்தை இயற்கை விவசாயமாக மாற்றுவது ஒரு நல்ல முடிவு என்று நான் நினைக்கிறேன், ஆனால் இந்தத்தீர்மானத்தின் போது வேறு பல சிக்கல்களும் ஏற்பட்டால் இது பிரச்சினையை உருவாக்கியது- இது நன்கு சிந்திக்கப்படாத பாதையில் அடைந்துகொள்ளப்படவேண்டியபாதையை நோக்கிப்பயனிப்பதாக உள்ளது.

**கேள்வி -** தற்போதைய நெருக்கடியை சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தின் பங்கு அவசியமானதா?

**பதில் -** இலங்கை இதற்கு முன்னர் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுள்ளது, இது உண்மையான அபிவிருத்திக்கான பாதையை சிக்கலாக்கியது. பொதுவாக சர்வதேச நாணய நிதியம் ஒரு பிரச்சினையிலிருந்து மீள்வதற்கான அமைப்பல்ல. இது ஒரு கடன் வழங்கும் அமைப்பாகும், இது வெளிவாரி நிதிகளைப் பெறுவதற்கான வாய்ப்பைத் தருகின்றது.

இந்த பொருளாதாரங்களின் நிதி நெருக்கடியை மறுகட்டமைப்புச் செய்வதன் மூலம் பெரும் பொருளாதாரங்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. இது ஊழல் மற்றும் தவறான நிர்வாகம் பற்றி வெளிப்படுத்தும் சேவைகளைச் செய்கிறார்கள். ஆனால் அவர்களின் முக்கிய கவனம் வேறுபட்டது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் அது சார்ந்த பலர் நெருக்கடியின் மூல காரணங்களை ஆராய விரும்பவில்லை, மாறாக அவர்கள் அதன் பயனாளிகளின் பக்கத்தில் நின்று, பொது வளங்கள், சேவைகளை மேலும் தனியார் மயமாக்குதல் மற்றும் இறக்குமதியில் அதிக அதிக கவனம் செலுத்துதல், பொது சேவைகளை குறைத்தல் மற்றும் பாரிய வணிகங்களுக்கு மானியம் வழங்குது போன்றவற்றில் அதிக அக்கறை செலுத்துகின்றது.

எனவே சர்வதேச நாணய நிதியம் தீர்வு அல்ல, ஏனெனில் சர்வதேச நாணய நிதியம் (மற்றும் உலக வங்கி) பிரச்சினைகளைத் தோற்றுவிப்பவர்களாக கருதப்படுபவர்கள்.

**கேள்வி -** பொருளாதார மீட்சிக்காக டொலர்களில் வருவாயைப் பெறுவதற்காக தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் வேறு நாடுகளுக்கு குடியேற அனுமதிப்பது பயனுள்ளதா?

**பதில் -** இது லாபத்தை விட நட்டத்தையே உருவாக்கும். தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களாக மாறுவதற்கு நீண்ட நேரம், முயற்சிகள், வளங்கள் மற்றும் சமூக செலவுகள் தேவை. இவர்கள் தான் பிறந்த நாட்டின் மூலதன சொத்துக்கள், அவர்கள் ஒழுங்காக பயன்படுத்தப்பட்டால், வருமானத்தை தம்நாட்டிலேயே பெருக்கும் திறன் கொண்டவர்கள். நாட்டிற்கு சேவை செய்வதற்கான உண்மையான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவது குறுகிய காலத்தில் சில டொலர்களை பெருவதை நீண்ட காலத்தில் அறிவு சார் மூலதனத்தின் இழப்பு பொருளாதாரத்திற்கு மிகவும் பாதிப்பைத்தரும். அறிவுசார் மூலதனமானது ஒரு மதிப்பு மிக்க வளமாகும்.

**கேள்வி -** உள்ளூர் வளங்கள், உள்ளூர் அறிவு சார் திறன்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பங்களிக்கவில்லையா?

**பதில் -** ஆம், அது வெளிப்படையானது. இறக்குமதி செய்யப்பட்ட யோசனைகள், நுட்பங்கள் மற்றும் வளங்களை அதிக அளவில் சார்ந்து உண்மையான வளர்ச்சிப் பாதையை எந்த நாடும் கண்டுபிடிக்க

முடியாது. நாடு உண்மையிலேயே ஒரு வலுவான அடித்தளத்தை உருவாக்க விரும்பினால், அது உள்ளூர் அறிவு சார் மூலதனம், மற்றும் திறன்களை நம்பியிருக்க வேண்டும். இதன் அடிப்படையில் ஒரு நாடு உள்ளூர் வளங்களை பயன்படுத்த, மற்ற நாடுகளின் யோசனைகள், திறன்களை திறம்பட உள்வாங்கி உலக அளவில் வலுவான பங்கை வகிக்க முடியும்.

**கேள்வி -** சுற்றுலாத் துறையை இலங்கை ஏன் அதிகம் சார்ந்துள்ளது?

**பதில் -** -எந்த ஒரு மூலத்தையும் அதிகம் சார்ந்திருப்பது எப்போதுமே ஆபத்தானது. சுற்றுலா எப்போதும் நிலையான வளர்ச்சிக்கான நிச்சயமற்ற பகுதியாகும். பொருத்தமான தொலைநோக்கு பார்வை இல்லாதது இந்த உயர்ந்த சுற்றுலாத் துறையுடன் சார்புநிலையை உருவாக்கியது.

**கேள்வி -** நமது தற்போதைய கல்வி முறை நெருக்கடியை எவ்வாறு உருவாக்கியது? நேரான மாற்றத்திற்கு எத்தகைய கல்வி சீர்திருத்தம் தேவை?

**பதில் -** வலுவான நவ-தாராளவாத நிலை பல நாடுகளில் கல்வி முறைகளை மாசுபடுத்தியுள்ளது என நான் நினைக்கிறேன். இலங்கையில் நீண்ட காலமாக தேசிய இலவச பொதுக் கல்வி முறை உள்ளது. இது நாட்டுக்கு பெரிய பலம். இந்த வலிமையை விரிவுபடுத்துவதும் தர மேம்பாட்டை உறுதி செய்வதும் தேவை. கூட்டுறவு வலுப்பெற்ற எதேச்சதிகார செல்வாக்கிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக சிந்திக்கவும் செயல்படவும், பொது உரிமைகளை மேல்நிலையில் வைத்திருக்கவும் கல்விப்புலம் மிகவும் முக்கியமானது

**கேள்வி -** முக்கிய தகவல் ஊடகங்கள் ,சமூக ஊடகங்கள் எந்த வகையான வகிபாகத்தைச் செலுத்த முடியும்?

**பதில் -** உலகெங்கிலும் உள்ள முக்கிய ஊடகங்களின் கட்டமைப்புக்கள் மிகப் பெரிய நிறுவனங்களின் ஆர்வத்துடன் உட்பொதிக்கப்பட்டவை. சுதந்திரமான ஊடகவியலாளர்கள் எப்போதும் விரோதமான அடிமைச் சூழலில் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு இது போராட்டம் போன்றது. உண்மையான தகவல்களைப் பெறுவதற்கான பொது உரிமைகள் எப்போதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. முக்கிய ஊடகங்கள் மீதான அழுத்தம் மற்றும் சமூக ஊடகங்களில் அதிக செல்வாக்குத்தொடர்பில் அதிக அக்கறைகொள்ளல் முக்கியமானது.

**கேள்வி -** இவ் வாறான பொருளாதார நெருக்கடிக்காலத்தில் கல்வியாளர்கள் மற்றும் கலைஞர்களின் பங்கு மற்றும் பொறுப்பு எவை குறிப்பாக மத நிறுவனங்கள் எவ்வாறு பங்களிப்புச்செய்ய முடியும்?

**பதில் -** கல்வியாளர்கள், கலைஞர்கள், மற்றும் மத நிருவனங்கள் கருதுக்களை உருவாக்குபவர்கள். இவர்கள் சமூகத்தின் பொதுவான செய்தித் தொடர்பாளர்கள். மக்கள் இவர்களுடைய கருத்தை மதிக்கிறார்கள் எனவே, மக்கள் நலனை நிலைநிறுத்துவதற்கும், சர்வாதிகாரத்தை கேள்விகேட்பதற்கும் பொருளாதாரக் கொள்ளையை மாற்றுவதற்கும், மக்கள் சக்தியை வலுப்படுத்துவதற்காக மேலாதிக்க சிந்தனைகளை எதிர்ப்பதற்கும் இவர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது.






பேராசிரியர் அனுமுகஹமது ஜஹாங்கிர்நகர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பேராசிரியராக கடமையாற்றி வருகின்றார். இவர் 1991 ஆம்ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை மானிடவியல் தொடர்பாகவும் கற்பித்து வந்துள்ளார். வருகை தரு புலமையாளராக கொலம்பியா பல்கலைக்கழகத்திலும், (அமெரிக்கா 1993) மனிடோபா பல்கலைக்கழகத்திலும் (கனடா 2001) பணியாற்றியுள்ளார். இவரின் ஆய்வு விருப்பு தளங்களாக உலகமயமாதல், சமூகநீதி மற்றும் மாற்றம், பால்நிலை, அரசசார்பற்றநிறுவனங்கள் போன்றவை காணப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டு முதல் சர்போஜன்கோதா (மக்கள் குரல்) என்ற சமூக பொருளாதார பிரச்சினைகளை பேசுகின்ற வங்காள காலாண்டு இதழின் ஆசிரியராகவும், 2016 ஆம்ஆண்டு முதல் சமாஜ்பிக்கன்சமேக்கா என்ற சமூகவிஞ்ஞான இதழின் ஆசிரியராகவும் கடமையாற்றி வருகின்றார். இவர் 2017 இல் அனுபவம்வாய்ந்த நிபுணர்களால் முன்வைக்கப்பட்ட மாற்று சக்தி தொடர்பான திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

இவர் அபிவிருத்தி அல்லது அழிவு (Development or Destruction), வங்காளத்தில் அபிவிருத்தி நெருக்கடிகளும் அரசசார்பற்ற நிறுவனங்களின் மாதிரிகளும் (Crisis of Development and the NGO Model in Bangladesh), பால்நிலை மற்றும் சமுதாயம் (Gender and Society), சமுதாயத்தின்பயமும் பொருளாதாரத்தின் வன்முறையும் (Society of Fear, Economy of Violence), உலகமயமாதலின்முரண்பாடு (Contrariety of Globalization), நாங்கள் 99% (We are 99%), கடவுள் மூலதனம் மற்றும் மக்கள்(God, Capital and People), அபிவிருத்தியின் முரண்பாடுகள் (Contrariety of Development), தலைநகரங்களின் சர்வதேசமயமாக்கலும் பெரும்பாண்மை உலகமும்(Internationalization of Capital and Majority World) போன்ற நாற்பதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

தமிழாக்கம் -

**பேராசிரியர் சிவானி சண்முகதாஸ்**

சந்தைப்படுத்தல் துறை
முகாமைத்துவ கற்கைகள்மற்றும் வணிகவியல்பீடம்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

**கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுவதன் மூலம் இறக்குமதி மட்டுமன்றி ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றது. வடக்கு, கிழக்கிலிருந்து மட்டுமன்றி இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களையும் – குறைந்தளவிலாவது ஏற்றுமதி செய்ய முடியும்.**



பி.பார்த்தீபன்

# எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுமா யாழ்ப்பாண – தமிழக கப்பல் சேவை?

யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையில் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் தமிழகத்துக்கும் இலங்கையின் வடபகுதிக்கும் இடையிலான கப்பல் சேவையும் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கும் இந்தக் கப்பல் சேவை, வடபகுதி மக்களுக்கு எந்தளவுக்குப் பயனுள்ளதாக அமையும் என்ற கேள்வி இப்போது எழுப்பப்படுகின்றது.

தமிழகத்தின் காரைக்குடிக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் சேவை தொடர்பாகத்தான் இப்போது ஆராயப்பட்டுவருகின்றது. காரைக்குடி துறைமுகம் ஒரு தனியாருக்குச் சொந்தமானது. இதனை இப்போது இந்தியாவின் மிகப்பரிய வர்த்தகப்புள்ளியான அதானி வாங்கியிருக்கின்றார். கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதான அபிவிருத்திப் பணிகளை அங்கு மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

அதானி நிறுவனம் கடந்த சில வாரங்களாக எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் அதனுடைய செயல் வேகம் எந்தளவுக்கு இருக்கும் என்ற கேள்வியும் இந்த இடத்தில் எழுகின்றது.

அதேபோல காங்கேசன்துறை துறைமுகமும் மக்களையும், பொருட்களையும் ஏற்றி இறக்குவதற்குத் தேவையான சில அபிவிருத்திகளைச் செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றது. அதனைவிட பாதுகாப்பு ஸ்கானர்கள் பொருத்துவது உள்ளிட்ட பல வேலைகள் அங்கு செய்யப்பட வேண்டிய நிலை உள்ளது. அதற்கான பணிகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஏற்றுமதிக்கான வாய்ப்பு உள்ளதா?

இந்தக் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதை வரவேற்றிருப்பவர்களில் முக்கியமானவர் யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தின் தலைவர் எஸ்.ஜெயசேகரம். எந்த வகையில் இந்த கப்பல் சேவை வடபகுதி மக்களுக்கு உதவப்போகின்றது என்ற கேள்வியை அவரிடம் முன்வைத்தோம்.

“இந்த கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் வடபகுதி மக்களின் பொருளாதாரம் மேம்படுவதற்கான வாய்ப்புக்கள் பெருமளவுக்கு இருக்கின்றது. இதுவரை காலமும் எமது மக்கள் கொழும்பின் ஊடாக பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்தவர்கள். இப்போது இவற்றை யாழ்ப்பாணத்தினூடாகவே செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டால் அவர்களுடைய செலவீனம் குறைவடையும். பொருட்களின் விலையும் குறையும்.

இதனைவிட இறக்குமதி மட்டுமன்றி ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றது. வடக்கு, கிழக்கிலிருந்து மட்டுமன்றி இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களையும் - குறைந்தளவிலாவது ஏற்றுமதி செய்ய முடியும்.

அதாவது கொழும்பின் ஊடாக ஏற்றுமதி செய்வதாயின் கொன்ரெயினரில்தான் அனுப்ப முடியும். அதற்கு பெருமளவு கையிருப்பு இருக்க வேண்டும். ஆனால், யாழ்ப்பாணத்திலிருந்து கப்பலில் அனுப்பும் போது, அரை லோட், கால் லோட் பொருட்களை கூட அனுப்பிவைக்க முடியும். ஏனெனில் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லவிருப்பது சிறிய ரக கப்பல்தான். இதனால் சிறிய ஏற்றுமதியாளர்கள் நன்மையடையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றது. இதன் மூலம் வடமாகாணத்தின் பொருளாதாரம் மேம்படும்.”

### என்ன பொருட்களை ஏற்றுமதி செய்யலாம்?

இவ்வாறு தெரிவித்த ஜெயசேகரத்திடம், “யாழ்ப்பாணத்திலிருந்து எவ்வாறான பொருட்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியும்? என்ற கேள்வியை முன்வைத்தோம்.

“இறக்குமதி என்று சொல்லப்படுகின்ற போது பலதரப்பட்ட பொருட்களையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய முடியும்” எனத் தெரிவித்த அவர், ஏற்றுமதி தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டார்.

“ஏற்றுமதிக்கு என பலதரப்பட்ட பொருட்களின் பெயர்கள் தெரிவிக்கப்படுகின்றது.

வாழைக்குலை, வெற்றிலை, பாக்கு, தவிடு, பனை உற்பத்திப் பொருட் கள் போன்றனவற்றை ஏற்றுமதி செய்யலாம்" என்று தெரிவித்தார் ஜெயசேகரம்.

வடபகுதி உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை சந்தைப்படுத்துவதில் எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளுக்கு இதன்கூலமாக ஓரளவுக்காவது தீர்வைக் காணக் கூடியதாக இருக்கும். இதன்மூலமாக அந்நியச் செலவணி வருமானத்தையும் அவர்களால் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பும் வெளியிடப்பட்டிருக்கின்றது. இது இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் ஒரு சிறிய பங்களிப்பையாவது வழங்கும்.

**இந்திய வர்த்தகமும் பொருளாதார நலனும்**

வடபகுதிக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருக்கம் வரலாற்று ரீதியானது. வடபகுதியில் பொருளாதாரம் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்திருக்கின்றது. பொருளாதார ஆலோசகர் செல்வின் மரியாம்பிள்ளை இது தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை -

அதேவேளையில் வடபகுதியின் பொருளாதார அபிவிருத்திக்கு காங்கேசன்துறை, மன்னார் துறைமுகங்கள் விரிவுபடுத்தப் படுவதும், இந்திய கப்பல்கள் மூலமான ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் அவற்றின் மூலமாக முன்னெடுக்கப்படுவதும் அவசியம் என்கிறார் பொருளாதார ஆய்வாளரான செல்வின் மரியாம்பிள்ளை.

இதன்மூலமாகப் பெறப்படக்கூடிய பொருளாதார நலன்கள் பல உள்ளன. நேரத்தியான ஒரு திட்டமிடல் மூலமாக இந்தப் பலன்களை அதிகரிக்கக்கூடியதாக இருக்கும். இந்தக் கப்பல் சேவை மூலமாக தமிழர்கள் நன்மைகளைப் பெற்றுவிடுவார்கள் என்ற கண்ணோட்டத்துடன் அரசாங்க அதிகாரிகள் இதனைப் பார்க்காமல் செயற்பட்டால் அந்த நலன்களை நாடு முழுவதும் பெறமுடியும் என்பதையும், தற்போது எதிர்கொள்ளப்படும் அந்நியச் செலவாணிக் பிரச்சினைக்கு தீர்வைக்காண்பதில் இதன்மூலமாக ஒரு பங்களிப்பை கூட பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதையும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

**பண்பாட்டு பரிமாற்றம் அதிகரிக்கும் வாய்ப்பு**

வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சரும், அரசியல் விஞ்ஞானத்துறை விரிவுரையாளருமான கலாநிதி கந்தையா சர்வதேஸ்வரன், கப்பல் சேவையின் மூலமாக வடபகுதி மக்களுக்கு நல்லதொரு சந்தைவாய்ப்பு கிடைத்திருப்பதாக கூறுகின்றார். இதனை திட்டமிட்ட முறையில் வடபகுதி மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் அவர் முன்வைக்கின்றார்.

“கப்பல் சேவை மூலமாக ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் அதிகரிக்கும். புதிய பொருட்கள் வருவதும், வர்த்தக செயற்பாடுகளும் அதிகரிக்கும். வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். இது பணப்புழக்கத்தை அதிகரிக்கும்.



இதனைவிட மக்களுக்கிடையிலான கலாசார, பண்பாட்டுப் பரிமாற்றங்கள் மேலும் அதிகரிக்கும். இவ்வாறு இந்திய மக்கள் அதிகளவுக்கு உல்லாசப் பயணிகளாகவோ அல்லது ஆன்மீகவாதிகளாகவே அதிகளவுக்கு வரும்போது இங்குள்ள ஹொட்டல்கள், ரெஸ்ரோரன்ட்கள் போன்றவற்றின் தேவைகள் அதிகரிக்கும். அதாவது உல்லாசப் பயணத்துடன் தொடர்பான பல வாய்ப்புக்கள் உருவாகும். இது பொருளாதார ரீதியா வடபகுதி மக்களைப் பலப்படுத்தும்.

ஆக இந்தக் கப்பல் சேவை மூலமாக பொருளாதாரம் பலமடையும், உல்லாசப் பயணத்துறை வளர்ச்சியடையும், மக்களுக்கு இடையிலான தொடர்பாடல் பரிமாற்றம் அதிகரிக்கும். இதன்மூலம் மறைமுகமான மற்றும் நேரடியான வேலைவாய்ப்புக்கள் வடபகுதியில் அதிகரிக்கும். இவை அனைத்தும் எமது பொருளாதாரத்துக்கு வலுச்சர்ப்பதாக அமையும்” என்ற கருத்தை முன்வைக்கின்றார் கலாநிதி சர்வேஸ்வரன்.

இதனால்தான், பொருளாதரத்தில் அதல பாதாளத்தில் விழுந்துபோய்க்கிடக்கும் இலங்கையை மீட்டெடுப்பதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான இந்தக்கப்பல் சேவையையும் விமான சேவையையும் முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.

**விமான சேவையின் முக்கியத்துவம்**

பலாலிக்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவை மீள ஆரம்பிக்கப்பட்டு இப்போது ஒரு மாதம் சென்றுவிட்டது. வாரத்துக்கு மூன்று நாள்கள் நடைபெறும் இந்த சேவையை கணிசமானோர் பயன்படுத்துகின்றார்கள்.

உண்மையில் விமான சேவையை மீள ஆரம்பிப்பதில் இந்திய அரசாங்கமும், தமிழ்த் தரப்பினரும் ஆர்வமாக இருந்த போதிலும், இலங்கை அரசாங்கம் அதனை விரும்பியிருக்கவில்லை. அதற்கு அரசியல் காரணங்களும் இருந்தது. அதுதான் இதனை சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக்கியிருந்தது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் என அழைக்கப்படும் பலாலி விமான நிலையம் மீளத் திறக்கப்பட வேண்டும் என்பதிலோ அங்கிருந்து தென்னிந்தியாவுக்கான விமான சேவைகளை ஆரம்பித்தால் வடபகுதியிலுள்ள தமிழர்கள் அதிகளவுக்குப் பயன்படுவார்கள் என்பதையிட்டோ இலங்கை அரசாங்கம் ஒரு போதும் அக்கறைகாட்டியது கிடையாது.

பலாலி விமான நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டு, மீளத் திறக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2014 இல் இலங்கை அரசுக்கு மட்டுமன்றி இந்திய அரசுக்கும் அழுத்தம் கொடுத்தது.

இந்தியப் பிரதமர் இதனை ஏற்றுக் கொண்ட நிலையில் கொழும்புடன் புதுடில்லி பேச்சுகளை 2015 இல் ஆரம்பித்தது. இதனையடுத்து பலாலி விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான உடன்படிக்கை ஒன்று இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

தென்பகுதியிலிருந்து இதற்கு எதிர்ப்புக் கள் கிளம்பிய போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்காக கொடுத்த அழுத் தம் காரணமாக இதனை நிறைவேற்ற வேண்டும் என்பதில் இந்தியா அக்கறையாக இருந்தது. இந்தியாவுக்கும் அதற்கான தேவை இருந்ததால் அதனைச் செய்தது.

இந்தியாவின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் பலாலி விமான நிலையம் "யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம்" என்ற பெயரில் 2019 ஒக்ரோபர் 17 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

ஆனால், கொரோனாவை காரணம் காட்டி இதனை மூடிய இலங்கை அரசாங்கம் இதனை மீளத் திறப்பதில் அக்கறை காட்டவில்லை. பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி இதனை ஒரேயடியாக மூடிவிடுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

(14பக்கம் பார்க்க)



AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

# அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையினால் தொடர்மாடி வீடு விற்பனையில் பெரும் பாதிப்பு

தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்ட அரசின் புதிய வரிக்கொள்கையில் பாரிய மாற்றங்களினை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. முக்கியமாக நேரடி (Direct Tax) மற்றும் மறைமுக (Indirect Tax) வரிகளில் கூடிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வரி அதிகரிப்பின் தாக்கமானது எல்லாத் துறையினருக்கும் இருந்தாலும், குறிப்பாக தொடர்மாடி மனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினருக்கு (Condominium House Developers) பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது. எந்த வகையில் இந்த வரி அதிகரிப்பானது தாக்கத்தை செலுத்த உள்ளது என்பதை நாம் நோக்குவோம்.

நேரடி வருமான வரி வீத அதிகரிப்பு – DIRECT INCOME TAX RATE INCREASED

ஏற்கனவே நடைமுறையில் இருந்த 14% மற்றும் 28% வருமான வரியானது தற்பொழுது 30% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. வரிச்சலுகைகள் மற்றும் வரி நிவாரணங்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. (REMOVAL OF TAX EXEMPTION & CON CESSIONS)

புதிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இந்த துறையில் உள்வாங்குவதற்குமாக ஏற்கனவே இருந்து வந்த பல வரிச்சலுகைகள் மற்றும் வரி நிவாரணங்கள் முழுமையாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.


## 'பெறுமதி சேர் வரி' மாற்றங்கள் – VALUE ADDED TAX (VAT) Changes.

பெறுமதி சேர் வரி கட்டாயமாக பதிவு செய்யப்பட்டு செலுத்த வேண்டிய விற்பனைப் புரள்வினில் (Turnover) ஏற்பட்டுள்ள மாற்றம்.

இதுவரையில் பெறுமதி சேர் வரி பதிவு செய்யப்படுவதற்கு Rs. 300 மில்லியனாக இருந்த உச்ச வரம்பானது தற்பொழுது Rs. 80 மில்லியன் ஆக குறைக்கப்பட்டுள்ளது.

**Compulsory VAT Registration Threshold reduced from Rs.300 Mn to Rs.80 Mn.**

இந்த மாற்றத்தினால் உள்நாட்டில் சிறியளவில் தொடர்மாடிமனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினர் பலர் VAT நெட்டில் (NET) உள்வாங்கப்பட்டு VAT வரி செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.




## பெறுமதி சேர் வரி வீத அதிகரிக்கப்பட்டுள்ளது - VAT Rate INCREASED

8% வீதமாக இருந்த பெறுமதி சேர் வரியானது பின்பு 12% ஆக அதிகரிக்கப்பட்டு, தற்பொழுது 15% ஆக மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

31 டிசம்பர் 2022 வரை VAT வரியிலிருந்து நிவாரணம் (Exemption) பெற்று வந்த தொடர்மாடிமனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினருக்கு ஜனவரி 2023 முதல் இந்த வரி நிவாரணம் நீக்கப்பட்டு அவர்களும் 15% VAT வரியினை செலுத்த கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு - 2.5 % SSCL Introduced

சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு என்கின்ற புதிய வரி 01 October 2022 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு புதிதாக அறிமுகப்படுத்திய SSCL வரியினாலும் தொடர்மாடிமனைகளின் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் நேரடியாக விலை அதிகரிப்பினை ஏற்படுத்துவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

பின்வரும் உதாரணம் மூலம் நாம் அவதானிக்க முடியும்,

மேற்கூறிய உதாரணத்தில், ஒரு தொடர்மாடிமனைக்கான விற்பனை விலையினில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஏயுவு மற்றும் SSCL வரிகளினால் பாரிய அதிகரிப்பினை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இந்த புதிய வரிகளினால் Rs. 5,384,615/=, மக்கள் தலையில் சுமத்தப்பட உள்ளது.

அது மட்டுமல்லாது அரசின் புதிய வரிக் கொள்கைகளினால் தனி நபருக்கான நேரடி வருமான வரி அறவிடும் முறையிலும் பாரிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அந்த வகையில் இரண்டு பொறிமுறையினில் நேரடி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.




ஒரு வருடத்திற்கான வரி நிவாரண அளவினை ரூபா.3,000,000/= இலிருந்து ரூபா.1,200,000/ ஆக குறைக்கப்பட்டுள்ளது. **(Personal Reliefs reduced from Rs. 3Mn to Rs. 1.2Mn per annum)**

**6%, 12%, 18%** ஆக இருந்த வரி விகிதங்கள் தற்பொழுது **6%, 12%, 18%, 24%, 30%, 36%** என பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்பு எப்போதும் காணாத நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்க அதிகரிப்பின் தாக்கத்தினால் **(Hyperinflation)**, சாதாரண அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் பாரிய விலையேற்றத்தினையே மக்கள் தாங்கிக்கொள்ள முடியாது திணறுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு அன்றாட வாழ்வினையே கொண்டு நடத்த முடியாமல் திணறுகின்ற சந்தர்ப்பத்தில், (குறிப்பாக நடுத்தர மற்றும் அதற்கும் கீழ் உள்ள மக்கள்) நடைமுறையில் உள்ள நேரடி மற்றும் மறைமுக வரி அதி கரிப்பின் தாக்கமானது தமக்கென ஒரு வீட்டினை சொந்தமாக வாங்கக்கூடிய சந்தர்ப்பத்தினை அவர்களால் அடைய முடியாமல் செய்து விடுமோ, என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது.



“மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தாற் போல்”, சாதாரண மக்கள் தமது கையில் இருக்கும் பணம் மற்றும் வங்கிக் கடன் மூலமாக ஒரு சொந்த மனை வாங்கலாம் என்ற யோசனையில் இருப்பவர்களுக்கு கூட, தற்பொழுது வங்கிகளினால் அறவிடுகின்ற கடனுக்கான வட்டி விகிதங்கள் பயத்தை ஏற்படுத்துகின்றது. வீடு வாங்குவதற்காக வழங்கப்படுகின்ற வங்கி கடனுக்கான வட்டி விகிதம் 8%, தொடக்கம் 14% ஆக இருந்தவை, தற்பொழுது 28% வரை அதிகரித்து சென்றுள்ளது மிகவும் துரதிஷ்டமாகும்.

மத்திய வங்கியின் தரவுகளின்படி இலங்கை பணவீக்கம் 70.6% **(October)**, 65% **(November)**, தற்பொழுது 59.2% **(December)** விகிதமாக காணப்படுகின்றது. எவ்வாறாயினும் சாதாரண நடைமுறையில் மக்கள் கொள்வனவு செய்கின்ற ஒவ்வொரு அத்தியாவசிய பொருட்களின் மற்றும் சேவைகளின் விலையேற்றமானது குறைந்தது மூன்று மடங்கு அதிகரித்து காணப்படுகின்றது. அன்றாட வாழ்க்கையினை கொண்டு நடத்தவே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்கள், இனி இதர செலவுகளையும் மற்றும் முதலீடு திட்டங்களையும் நிச்சயமாக செய்ய முடியாத ஒரு சந்தர்ப்பத்தை சந்தித்த வண்ணம் இருக்கின்றனர்.

மேற்கூறிய காரணங்களுடன் பின் வரும் பாதக தாக்கங்களையும் “தொடர்மாடிமனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினர்” நிச்சயமாக சந்திக்க உள்ளனர்.

### இறக்குமதிக் கட்டுப்பாடு – தடை (IMPORT Banned - Restrictions)

நாடு தற்பொழுது பாரிய பொருளாதார பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதால், அரசாங்கம் கட்டுமானத்துறை சார்ந்த மற்றும் அதற்குத் தேவையான பெருவளவான பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அத்துடன் பல ஆடம்பர இறக்குமதியை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளது. இதன் காரணமாக தொடர்மாடி மனைகளை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத நிலைமையை தற்பொழுது காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி **-Adverse Rupee Depreciation**

பாரிய வேலையில்லா பிரச்சினை தலைதூக்கியுள்ளமை - **Unemployment Problem**

பெருவளவான மக்கள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நாட்டைவிட்டு வெளியேறுகின்ற ஒரு நிலைப்பாடு – **Migration.**

நாட்டின் தற்போதைய வறுமை நிலைமை காரணமாக தொடர்மாடி மனைகளை கொள்வனவு செய்வதற்காக முற்பணம் செலுத்தியவர்கள் மிகுதி பணத்தினை கொடுக்க முடியாத நிர்ப்பந்தத்தினால், தமது மனைக்கான கொள்வனவினை இடைநிறுத்தி, முற்பணத்தை மீளப் பெற ஆரம்பித்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதிகரித்து வரும் வாழ்க்கை செலவினை சமாளிக்க முடியாமல் பலர், பிரதான நகரான கொழும்பு மற்றும் அதனை சூழ்ந்த நகரங்களில் இருந்து தமது சொந்த ஊருக்கு மீளத் திரும்பி செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் தொடர்மாடி மனைக் கான கேள்வி **(Demand)** பாரியளவில் வீழ்ச்சி அடைந் துள்ளது.



இந்த ஒட்டுமொத்த பாதக மான சூழ்நிலையால், “தொடர்மாடி மனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினர்” மிகவும் பாரதூரமான முறையில் நெருக்கடியை சந்திக்க உள்ளனர் என்பது கசப்பான உண்மையாகும்.

தமிழர் பொருணமியம்
வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
05.02.2023



எங்கள் வாழ்வும் வளமும்

# பூசணியின் காதல்

- தமிழ்க்கவி -

> “முன்னர் எமது பூசணிக்காய்களின் விதைகளையே நாம் காலத்திற்கேற்ப பயிரிட்டோம். உற்பத்தி செய்யும் பழங்களிலிருந்து பெற்ற விதைகளை மீண்டும் நட்டோம். இன்று விதைகளை அவர்கள்தான் தருவார்கள். நாம் அறுவடை செய்பவை மலட்டு காய்களைத்தான். உண்பதும் அவற்றைத்தான்.”

‘பாடுபட்ட கட்டாடிக்கு பூசணிக்காயும் சோறும்’ கோவில் திருவிழாக்களின் முடிவில் பறை முழங்க கலையாடுவது வழக்கம். இந்தக்கலையாடும் சடங்கில் ஒருவர்மீது சாமி இறங்கி கட்டுச் சொல்வதுண்டு .‘கட்டு’ என்றால் ஒருவர் நினைத்தகாரியத்தை சொல்லி அது நடக்குமா நடக்காதா என்பதையும், அவர்களுக்கு இருக்ககூடிய நன்மை தீமை பரிகாரங்கள் என்பவற்றையும் சொல்லும். அது பெரும்பாலும், ஒரு சலவைத் தொழிலாளியாக இருந்ததும் உண்டு. அந்தக்காலம் சொல்லக் கேள்வி. இந்த ஆடிக் கட்டுச் சொல்வதை நானே பலதடவைகள் பார்த்திருக்கிறேன்.



இதனால் இவர்களை ‘கட்டாடி’ என்றழைப்பர்.

நான்தான் சொன்னேனே! கிராமத்துக் கதைகளை சொல்லப் போனால் கட்டாயம் உபகதைகள் வரத்தான் செய்யும். நான் பேச வந்தது பூசணிக்காயைப்பற்றி. பூசணிக்காயில் இந்த ‘ணி’ தப்பான எழுத்தென பலர் நினைக்கலாம் ‘னி’தான் சரி என்றும் சொல்லலாம். விடுங்க பூசினிக்காய் பூசணிக்காய் எது சரியென்றால் நான் பின்னதைத்தான் சொல்வேன்.

கோவில் பூசையில் பச்சையரிசியுடன் பூசணிக்காய் துண்டுகளைக் கொட்டி வழுந்துப் பானையில் அவியவைத்து, கட்டிப்பாலாக தேங்காய்ப்பால் பிழிந்து விட்டு பச்சைமிளகாய் வெங்காயம் போட்டுக்கிளறி இறக்கிவைக்கும் பாற்பொங்கல், முதலில் கட்டாடியவருக்கு கொடுத்து மற்றவர்களும் உண்பார்கள். இன்னும் அவிசு என ஒருவகை. அதில் பலவகை மரக்கறிகளையும் உப்பு புளி காரம் சேர்த்து சமைப்பார்கள். இது தவிர பயறு சர்க்கரை பால் பச்சையரிசி நெய்விட்டு ஆக்கும் இனிப்பு பொங்கலும் உண்டு. கலியாண வீடுகளில் பிரதான கறி பருப்பு பூசணிக்காய். அதன் பிறகுதான் ஏனைய கறிவகைகள் அடங்கும்.

எங்கள்பரம்பரையில்பூசணிக்கொடியை ஆடி அமாவாசையன்று விதைபோடும் வழக்கம் உண்டு. ஆடிஆமாவாசைக்கு போடவென்றே பாகல் சுரை பூசணி போன்றவற்றின் விதைகளை சேமித்து வைப்பர். இந்தக் கொடிகள் ஆறுமாதங்கள் நிலத்தில் வாழும். காய்கள் காய்த்து அதுவாகவே முற்றி பழுத்து கொடி செத்தபின்னர்தான் விவசாயி அவற்றை பிடுங்குவான். பூசணியிலிருந்து காயைப் பிடுங்க கத்தி கோடரி என்று கொண்டு போவதில்லை. அதை பிடுங்கி எடுக்கவும் முடியாது.



பூசணிக்காயை புரட்டி தலைகுப்பிற வைத்து அழுத்தினால் பூசணிக்காயின் காம்பு முறிந்து காய் தனியாக வரும். இப் போது பட்டணத்து நாகரிகம் அதை அறியாமல் கத்தியுடன் அலைகிறதைப் பார்க்கிறோம். எமது அயலில் ஓர் ஆசிரியர் குடியிருக்கிறார். அவரது வாழை குலை போட்டு பொத்தி நீள மாக வந்துவிட்டது. வாத்தி பெரிய கொக்கியை வைத்துக் கொண்டு அந்தப் பூவைப் பறிக்க வெகு நேரமாக முயன்று கொண்டிருந்தார். அது கொக்கையில் சிக்கவேயில்லை. எனக்கா சிரிப்பான சிரிப்பு. மனம் கேட்காமல் வேலிக்கரையில் போய் சொன்னேன்,

"மாய்ரர்!. கொக்கைய விட்டிட்டு தடியால பொத்திய மேல தள்ளுங்க மாய்ரர்" என்று, அவர்தள்ள பொத்தி முறிந்து கீழே வந்தது. உப்பிடித்தான் கையால கிழிக்கிற பனங்கிழங்குக்கு ஆப்பு வல்லூட்டியெல்லாம் தேடுறது. போச்சா? கதைய எங் கயோ விட்டிட்டு வந்திட்டனா?

'ச்ச ஙா...'பூசணிக்காய் கொடியிலயிருந்து ஒடிச்சா போது மோ? ஒவ்வொரு காய் ஒராளால முக்கித்தக்கி தூக்க முடியும். சிலகாயள் உண்மையிலேயே 'பூ....சணி'இருவது லீட்டர் கொள்ளக்கூடிய பானையளவுக்கு இருக்கும். அதை அனேகமா கோயிலுக்கு கலியாண வீட்டுக்கெண்டு வைப்பார்கள். பழுத்த பூசணிக்காயை பரணில் போட்டுவைத்தால் வருடக்கணக்கில் கிடக்கும்.

பூசணிக்காயை தனியொருவராக வெட்டிப்பிரிக்க முடியாது. பெண்கள் இதற்கு ஆண்களின் உதவியை கோருவர்... ஒருவர் காயை இறுக்கிப் பிடிக்க மற்றவர் ஒரு பெரிய கத்தியை காயின் நடுக்காம்பில் வைத்துப்பிடிக்க கனமான இரும்பினால் கத் தியை அடித்து காயில் இறக்கி பிரிப்பார்கள். பின்னரும் சிறு துண்டுகளாக்க இப்படி அடித்துத்தான் பிரிக்க வேண்டும். இப் போதுள்ள காய்கள் சும்மா தூக்கியடித்தால் பிய்ந்து போகிறது.. போகமாக விளைந்த பூசணிக்காயில் உள்ளி மிளகு குத்திப் போட்டு வெள்ளைக்கறி வைக்கலாம். இதுக்கென்றே காடுகளில் விளையும் கானக்கொச்சிக்காய் ஒரு தென்னீக்கின் பருமனில் ஒரு சென்ரிமீட்டர் நீளமும் பத்து பச்சைமிளகாயின் காரத்தை ரெண்டு காய்களில் கொண்டதுமான காய் அல்லது பொத்தமிள காய் போட்டு குழம்பும் வைக்கலாம்.

சிறீமாவோ காலத்துப் பஞ்சம் வந்த போது எங்கள் பூசணி யில் சுமாரான இனம்தான். அறுபது காய்கள் பிடித்திருந்தன. பூசணிக்காயை கட்டிக்காய் அவித்தல் என்ற முறையில பெரிய துண்டுகளாக வெட்டி உப்பும் மிளகுதூளும் பிரட்டி நீத்துப் பெட்டியில் வைத்து ஆவியில் அவிப்போம். அவித்த பூசணித் துண்டுகளை காரச்சம்பலுடன் சேர்த்தோ, உப்பும் மிளகும் தூளாக்கி அதில் தொட்டோ உண்போம். இது அநேகமாக காலை உணவாகிவிடும். பூசணிக்காயை அதே ஆணியடித்த தட்டில் சீவி தேங்காய்ப்பாலும் சிறிதளவு சீனி (பழுத்த பூசணிக்காயில் இயற்கையாகவே இனிப்புண்டு)கலந்து மாவுடன் பிசைந்து உருண்டைகளாக்கி பொரித்து உண்போம். பூசணிக்காயில் பொரியலும் பண்ணலாம். பிரட்டலும் எமது தமிழில் சுண்டலும் பண்ணலாம்.

உன்ர அம்மாவை உனக்கு எவ்வளவு பிடிக்கும் என்றால் கைகளைப்பரப்பும் சிறுவர்களை பார்த்திருக்கிறீர்களா? பிளாஸ்டிக் அலுமினியத்தில் குடங்கள் இல்லாத காலம் வெண்கலக்குடம் வெளியே எடுப்பதில்லை. நாங்கள் மண் குடத்தில் தண்ணீர் அள்ளி இடுப்பில் சுமந்து வருவோம் . என் சித்தப்பா வந்து என்னிடம், 'உங்கட கொடியில் எவ்வளவு பெரிய பூசணிக்காய் இருக்கு?' என்று கேட்டார். நான் எப்படி சொல்வது. கைகளை விரித்தால் குடம் விழுந்து உடைந்து போகுமே. நான் சட்டென குடத்தை இறக்கி வைத்துவிட்டு என் கைகளை விரித்து "இவ்வ்வவளோ பெரிது"என்றேன். குடம் வைத்தது சரியில்லாமல். சரிந்து குறைக்குடமாகி விட்டது. மீண் டும் கிணற்றடிக்குப் போய், அதை நிரப்பிக் கொண்டு வந்தேன். ஏன் தெரியுமா? குறைக்குடம் தழும்பும். இடுப்பில் நிற்காது.

விவசாய உற்பத்திகள் மெதுவாக அபிவிருத்தி அடைவதற் கான உதவிகளை (உதவிதாங்க நம்புங்க) நவீன ரகங்களை தாமாக முன்வந்து தந்தார்கள். சந்தையிலே சுருங்கிப்போன சுரைக்காய் வடிவத்தில் கைக்கு அடக்கமாக பூசணிக்காய்... இதை வேண்டுமென்றால் பூசினிக்காய் என்போம் அவ்வளவு பெரிய அழுத்தம் தேவையில்லை.

"துபாய் பூசினி"சும்மா சொல்லக்கூடாது. ஒரு கொஞ்ச விதைகள்தான். அதுவும் பெரும்பாலும் சப்பி. முளைக்காது



காய் ருசிதான். ஆனால் எங்களுடைய சக்கரைப்பூசணிக்கு கிட்டவும் வர முடியாது.

அழகான அலுமினிய டப்பாவில் அடைத்து வரும் விதைகள் அதிலேயே செரசான் என்ற மருந்து தொற்று நீக்கியாக கலந்து வருகிறது. ஐந்தடிக்கு ஒரு நிலையம். பெரிதாக வேலை யில்லை கொடி ஓட ஆரம்பிக்கும்போதே கணுக்களில் பூவும் வரத் தொடங்கும். சலங்கை போல நிறையக்காய்கள். என்ன கொஞ்சம் ரசாயன உரங்கள் போட வேண்டும். அப்படியே பூச்சிகள் தாக்காமல் இருக்க கிருமிநாசினி தெளிக்க வேண்டும். பெரிதாக முக்கித்தக்கியெல்லாம் தூக்க வேண்டாம். சின்னதா ஒரு கூடையில பொறுக்கிப் போட்டு சந்தைக்கு கொண்டு போக லாம். ஆனா, இந்த பூசணிய நாங்க மட்டும் விரும்பினா சரியா? நம்மூரைச் சேர்ந்த சர்க்கரைப் பூசணியாரும் துபாய் பூசினியை காதலிக்க ஆரப்பித்தாரா? குலங் கோத்திரமே நாசமாகிவிட்டது. இப்போது கலப்பினமாக மாறிவிட்ட சக்கரைப்பூசணியில் பழைய ருசியுமில்லை. பழைய பருமனுமில்லை. அவங்க காய் தரு வார்கள் அதை நாங்கள் சாப்பிட்ட பின்?

முன்னர் எமது பூசணிக்காய்களின் விதைகளையே நாம் காலத்திற் கேற்ப பயிரிட்டோம். உற்பத்தி செய்யும் பழங்களிலி ருந்து பெற்ற விதைகளை மீண்டும் நட்டோம். இன்று விதை களை அவர்கள்தான் தருவார்கள். நாம் அறுவடை செய்பவை மலட்டு காய்கள்களைத்தான். உண்பதும் அவற்றைத்தான்.

# எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுமா ....




**விஸ்தரிக்க வேண்டிய விமான ஓடு பாதை**

பலாலிக்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவை மீள ஆரம்பிக்கப்பட்டு இப்போது ஒரு மாதம் சென்றுவிட்டது. வாரத்துக்கு மூன்று நாள்கள் நடைபெறும் இந்த சேவையை கணிசமானோர் பயன்படுத்துகின்றார்கள். பலாலி ஓடுபாதையின் அளவைக் கருத்திற்கொண்டு சிறிய ரக விமானம் ஒன்றே தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றது. ஓடுபாதையை மேலும் விரிவாக்கினால் பெரிய விமானங்களும் இங்கு வரத் தொடங்கும்போது தமிழகத்திலிருந்தும் அதிகளவுக்கு உல்லாசப் பயணிகள் வரத் தொடங்குவார்கள்.

அதேவேளையில் தமிழகத்துக்குச் செல்லும் வடபகுதி மக்களும் கொழும்பு சென்று சிரமப்படாமல் பலாலி விமான நிலையத்தின் மூலமாகவே தமது பயணத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். பலாலி விமான நிலைய ஓடுபாதையை விஸ்தரிப்பதற்குத் தேவையான நிதி உதவியை வழங்குவதற்கு இந்தியா முன்வந்திருப்பதாகவும் தெரிகின்றது. அதனால், அதற்கான வேலைகளும் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கலாம்.

ஓடுபாதையை விஸ்தரிப்பதற்கு பொதுமக்களின் காணியை மேலும் சுவீகரிப்பதற்கான தேவை ஏற்படாது என தெரிவிக்கப்படுகின்றது. இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் நடத்திய பேச்சுக்களின் போது தமிழ் எம்.பி.க்கள் இது தொடர்பாகவும் ஆராய்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதும், வடபகுதியூடாக கப்பல் சேவை தொடங்கவிருப்பதும் இலங்கை - இந்திய உறவுகளில் ஒரு முக்கிய மைல்கல் என்றுதான் சொல்ல வேண்டும். அதேவேளையில் பொருளாதார ரீதியான பலன்களும் இதில் பெருமளவுக்கு கிடைக்கும் என்பதால் தமிழ் மக்கள் திட்டமிட்ட முறையில் இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்!



## வீடு வாடகைக்கு தேவை

திருநெல்வேலி, நல்லூர், கச்சேரி ஆகிய வற்றிற்கு அண்மித்த பகுதிகளில் இரண்டு பேர் (கணவன், மனைவி) தங்குவதற்கு சிறிய வீடு வாடகைக்கு தேவை. தொடர்புக ளுக்கு - 0758869168

---

யாழ் நகரினை அண்மித்த பகுதிகளில் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை. நீண்டகால வாடகை அல்லது குத்தகை விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு - 0777277009

---

## வேலை வாய்ப்பு

தமிழ் தட்டச்சு தெரிந்த பக்க வடிவமைப்பா ளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலை வாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சமபளம் தீர்மானிக்கப்படும். தொடர் புகளுக்கு 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாய பண்ணைக்கு தங்கி நின்று வேலைசெய்யகூடிய ஆண் தோட்டக் காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும். தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்ப ளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்பு கொடுப் பனவுகளும் வழங்கப்படும். தொடர்புக ளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப் பிக்கலாம். தொடர்புக ளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகத்தில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலை வாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற் கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம்வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு. தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள Software and Web Developement நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுப வம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை onlinew4u@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (மின்னஞ்சலின் subject இல் Software and Web Developement என குறிப்பிட்டு அனுப்பவும்)

---

யாழில் இருந்து வெளிவரும் தினசரி பத்தி ரிகைக்கு ஒன்றிற்கு ஒப்புநோக்குநர் (Proof Reader) தேவை. தமிழில் புலமையும் தெளி வான கண்பார்வையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பகல் மற்றும் இரவு வேலைகள் உள்ளன. உங்களது விண்ணப் பங்களை அனுப்பி வைக்கவேண்டிய முகவரி - 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் IT நிறுவனத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் (Office Admin) வேலைவாய்ப்பு உள்ளது. அடிப்படை ஆங்கில, கணினி அறிவு அவசி யமானது. தொடர்புகளுக்கு 0777113333

---

விளம்பர சேகரிப்பாளர் (Advertisement Collector) முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. light vehicle driving license - B, C, G1 சாரதி அனு மதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு 0770684905

---



## காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வன விலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும். தொடர்புகளுக்கு 0777435557

---

A9 வீதியில் இருந்து 1 km தூரத்தில் எழுது மட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற் கையான சூழலில் உங்களின் ஓய்வு காலத்தினை அமைதி யாகவும் ஆரோக்கி யமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர் புகளுக்கு 0779789177

## FOR SALE விற்பனைக்கு

பழமையான (Antique) கார் பிரியர் களுக்கான Austin Cambridge A55 கார் விற்பனைக்கு உண்டு. திருத்த வேலை கள் உள்ளன. சரியான ஆவணங்கள் உண்டு. தொடர்புகளுக்கு 07777 40413

---

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாக தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள் ளன. யாழ்ப்பாணத்து சீதோஷ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 5 - 7 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட் டுமே. தொடர்புகளுக்கு 0766482303

---

4TB முதல் 18TB வரையான Hard Disk யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு. Video Editing மற்றும் CCTV Camera storage போன்ற தேவைகளுக்கு உகந்தது. 6TB Sea Gate hard disk - Rs34,000, 4TB TOSHIBA hard disk - Rs23,000, 4TB WD Purple hard disk - Rs21,000, 18TB WD Element external hard disk - Rs90,000, 8TB WD My book external hard disk - Rs60,000, 8TB Seagate hard disk - Rs61,000. தொடர்புக ளுக்கு 0762399874

இலவச இதழ்....

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் இலவச இதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

021 431 5287 | 076 44 38 620

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

# ஒன்லைன் மூலமாக வெளிநாடுகளிலிருந்து எமது உற்பத்திகளை அதிகம் வாங்குகிறார்கள்



## PNS நிறுவன உரிமையாளர் பிரியா நடேசன்



நேர்கண்டவர் - ஞா.கவினி

வெளிநாட்டிலிருந்து எமது உற்பத்தியினை வாங்கும் வாடிக்கையாளர்களால் எமது நாட்டிற்கு டொலரும் சிறியளவிலே வர ஆரம்பித்துள்ளது. இது அதிகரிக்க அதிகரிக்க எமது பொருளாதாரமும் நாட்டினுடைய பொருளாதாரமும் வளர்ச்சியடையும் என்று கூறுகின்றார் கிளிநொச்சியிலிருந்து செயற்படும் PNS Entrepreneurship Pvt LTD என்ற நிறுவனத்தின் உரிமையாளர் பிரியா நடேசன்.

அண்மைக்காலத்தில் அவரது நிறுவனத்தின் பெயர் பிரபலமாகியிருக்கும் நிலையில், தமிழர் பொருண்மியம் சார்பில் அவரிடம் நேர்காணல் ஒன்றை எடுத்தோம். அவரது நேர்காணலிலிருந்து முக்கியமான பகுதிகள் எமது வாசகர்களுக்காக -




**கேள்வி-** PNS என்ற நிறுவனத்தினை என்ன நோக்கத்திற்காக ஆரம்பித்தீர்கள்? அந்த நோக்கத்தில் இப்போது எந்தளவிற்கு வெற்றியடைந்துள்ளீர்கள்?

**பதில் -** நான் இந்த நிறுவனத்தை ஆரம்பித்து உலகம் முழுவதும் Brand ஆகவேண்டும் எல்லா நாடுகளிலும் PNS Product என்று கேட்டு வாங்குமளவிற்கு நாம் உயரத்திற்கு செல்ல வேண்டும். நான் இல்லாமல் போனபின்பும் PNS உலகமெல்லாம் நீடித்து நிலைத்து வாழ வேண்டும் என்பது எனது கனவு.

நான் இந்த நிறுவனத்தினை ஆரம்பித்ததன் காரணம் உற்பத்தியினை செய்வதன் மூலம் எமக்கு தேவையான பொருள்களை இறக்குமதி செய்து தான் வாங்க வேண்டும் என்ற தேவை இருக்காது. அதனால் இறக்குமதியில் தங்கியிருப்பதை தவிர்ப்பதோடு நாம் ஏற்றுமதியின் மூலம் அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ளலாம். எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினை தவிர்த்து எமது நாட்டிற்குள் தொடர்ந்தும் டொலரினை கொண்டுவந்து நாட்டினது பொருளாதாரத்தினையும் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்பதாலே எனக்கு இப்படி ஒரு நிறுவனத்தினை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

அத்தோடு வியாபாரம் என்பது ஓர் பெரும்கடல் நான் ஆரம்பித்த நாட்களில் இருந்து இன்று வரை பல மாற்றங்களை பெரியளவிலோ சிறியளவிலோ ஏற்படுத்தியிருக்கிறேன்.

வெளிநாட்டிலிருந்து எமது உற்பத்தியினை வாங்கும் வாடிக்கையாளர்களால் எமது நாட்டிற்கு டொலரும் சிறியளவிலே வர ஆரம்பித்துள்ளது. இது அதிகரிக்க அதிகரிக்க எமது பொருளாதாரமும் நாட்டினுடைய பொருளாதாரமும் வளர்ச்சியடையும்.

நான் ஆரம்பித்த நாட்களில் இருந்து இப்போது வரை பல வாடிக்கையாளர்களின் மனதினை வென்று எமது உற்பத்தியான கச்சான் லட்டு பலரது வீட்டில் தொடர்ந்து வாங்கியுண்ணும் ஓர் சத்தான சுவையான ஓர் பொருளாக மாறியுள்ளது. இந்த நிறுவனம் ஆரம்பித்த பின்னர் பணத்தினை மாத்திரமல்லாது பலரது அன்பினையும் ஆதவினையும் சம்பாதித்துள்ளேன். இன்னும் சில காலங்களிலேயே எமது நிறுவனம் நான் நினைத்தளவிலான தூரம் வளர்ச்சியடையும் அதற்கான ஒவ்வொரு அடிகளையும் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

“நான் ஆரம்பித்த நாட்களில் இருந்து இப்போது வரை வாடிக்கையாளர்கள் பலரின் மனதை வென்ற எமது உற்பத்தியான கச்சான் லட்டு பலரது வீட்டில் தொடர்ந்து வாங்கியுண்ணும் ஓர் சத்தான சுவையான ஓர் பொருளாக மாறியுள்ளது.”

**கேள்வி -** இதற்கான முதலீட்டினை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்? இதற்காக வங்கிக் கடன்களை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டதா?

**பதில் -** இதுவரை வங்கியிலிருந்து கடன் எதுவும் பெறவில்லை. இனிவரும் காலத்தில் தேவைகளுக்கேற்ப பெரியளவிலான விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு பெரியதொரு நிதி தேவைப்படுகிறது. அதற்காக இனி வங்கியில் இருந்தும் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் நேர்ந்தால் பெற்றுக் கொள்வேன்.

இதுவரை எனது சொந்த உழைப்பினால் சேமித்த பணத்தினை முதலீடாக




போட்டு ஆரம்பித்தேன். அத்தோடு தங்கத்திலும் முதலீடு செய்து வைத்திருந்தேன். அதனை பயன்படுத்தி அடுத்த கட்ட வேலைகளை ஆரம்பித்தேன். ஏனையவை எல்லாம் நான் சம்பாதித்தேன். சில உறவுகளும் நண்பர்களும் ஆதரவாக இருந்தார்கள். அதனால் கொஞ்சம் கொஞ்சமாக முன்னோக்கி கொண்டு செல்ல கூடியதாக விருந்தது.

**கேள்வி -** வேலைவாய்ப்புக்களைப் பொறுத்தவரையில் எவ்வாறானவர்களுக்கு உங்கள் நிறுவனத்தில் வேலை வாய்பைக் கொடுக்கிறீர்கள்?

**பதில் -** வேலைவாய்ப்பு அதிகமாக பெண்களுக்கு தான் கொடுத்து வருகிறோம். அதிலும் குறிப்பாக இந்த துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் உற்பத்தி வியாபார அறிவினையும் அனுபவத்தினையும் கொண்டிருப்பவர்களையுமே இங்கே வேலைக்கு அமர்த்துகிறோம். அத்தோடு நேர்மையானவர்கள் அவர்களது நன்நடத்தைகள் அடிப்படையிலே வேலை வாய்ப்புக்களை கொடுத்து வருகிறோம்.

**கேள்வி -** உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களை அடிப்படையாக வைத்ததாகவே உங்களுடைய தொழில் நிறுவனம் இயங்குகிறது. இவற்றினைப் பெற்றுக் கொள்வதில் உங்களுக்கு உள்ள பிரச்சினைகள் என்ன?

**பதில் -** ஆம் நாங்கள் எங்களுக்கு தேவையான மூலப்பொருட்களை இன்னும் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கவில்லை அதனால் நாங்கள் விவசாயிகள் மற்றும் எமது வியாபாரிகளிடமே உற்பத்திகளை பெற்றுக் கொள்கிறோம். அதனால் சில நேரங்களில் பொருட்கள் விலைகள் நாளுக்கு நாட்கள் அதிகமாக மாறிக் கொண்டு வருகிறது. அத்தோடு பொருட்களுக்கான தட்டுப்பாடும் ஏற்படுகிறது. அதுவும் எமது உற்பத்தியில் ஓர் மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. இனிவரும் காலத்தில் எமக்கான மூலப்பொருட்களை நாமே உற்பத்தி

**கேள்வி -** உங்கள் உற்பத்திகள் எவ்வாறானதாகவுள்ளது. சந்தையில் எதற்கு அதிகமான கிராக்கி உள்ளது?

**பதில்:** எமது உற்பத்திகள் கலப்படம் ஏதுமற்றதாகவும் சரியான சுத்தமான முறையில் கழிவுகளை அகற்றி சுத்தமாக மேற்கொள்ளப்பட்டதாகும். எமது உற்பத்திகளை ஒன்லைன் மூலமாகவும் வெளிநாட்டில் இருப்பவர்களும் அதிகமாக வாங்குகிறார்கள். மற்றும் அம்மாச்சி போன்ற இடங்களில் அதிகமாக விற்பனை நடைபெறுகிறது.

**கேள்வி -** இந்த உற்பத்திக்கான பயிற்சிகளை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில் -** ஆரம்பத்தில் நான் அறுவடைக்கு பின்னான தொழினுட்பம் என்ற கற்கைநெறியினை அநுராதபுரத்தில் பூர்த்தி செய்த பின்னர் அதனை அடிப்படையாக வைத்துக் கொண்டும் கிளிநொச்சியில் அமைந்துள்ள உற்பத்தி மற்றும் வியாபார பயிற்சி நெறிகளை முறையாக கற்றுக் கொண்டதை வைத்தும் ஆரம்பத்தில் உற்பத்திகளை செய்ய ஆரம்பித்தேன். அது அந்தளவு தூரம் மக்களை




சென்றடையவில்லை. ஏனென்றால் அந்த உற்பத்திகள் அனைத்துமே நாங்கள் அனைவரும் பொதுவாக செய்யும் அனைவருக்கும் தெரிந்த உற்பத்தியாக இருந்தமையினால் அது அவ்வளவு தூரம் வெற்றியை தராததால் நானே புதிதாக சில உற்பத்திகளை உருவாக்கினேன். அவற்றினுள் என்னுடைய உருவாக்க சிந்தனைகளையும் புகுத்தி சில விடயங்களை வித்தியாசமாக செய்வோம் என்று செய்ய ஆரம்பித்தேன். கச்சான் லட்டு ஒரே நாளிலே நல்லதொரு வரவேற்பினை பெற்றது. அதனால் தற்போது புதிய உற்பத்திகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தி வருகிறேன்.

**கேள்வி:** தற்போதைய பணியாளர்களுக்கு இந்த உற்பத்திகள் தொடர்பான எவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படுகிறது? அவை போதுமானதாக உள்ளதா?

**பதில்:** எம்மோடு கடைசிவரை பயணம் செய்பவர்களுக்கான போதிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. சிலர் புதிதாக வருகிறார்கள். அவர்களுக்கு மேலும் பயிற்சிகள் எம்மால் வழங்கப்படும்.

**கேள்வி -** உற்பத்திப் பொருட்களின் தரத்தினை பேணுவதில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

**பதில் -** தரமான உற்பத்தி மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தரமான முறையில் செய்யப்பட்ட உணவுகள் இரசாயனக் கலப்பீடுகள் பயன்படுத்தாமையினால் வேகமாக காலவதியாகிவிடும் அதனை குறிப்பிட்ட காலத்திற்குள் விற்று முடித்தல் பெரும் சவாலாகும். தரமாக செய்யும் போது அதிகநேரமும் வேலையாட்களின் தேவையும் அதிகம் செலவாகும் .

**கேள்வி:** உற்பத்திப் பொருட்களைப் பொதியிடுவதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன ?

**பதில் -** விலைகள் அதிகமாக உள்ளமை மற்றும் அதற்கான இயந்திரங்கள் விரைவில் பழுதடைந்து விடும். அதனால் செலவுகள் அடிக்கடி ஏற்படும்.

**கேள்வி -** உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகளை நம்பியதாகவே உங்களுடைய உற்பத்திப் பொருட்கள் உள்ளன. இவ்வாறு சந்தைப்படுத்துவதில் உங்களுக்குள்ள நெருக்கடி என்ன?

**பதில் -** கேள்வி அதிகமாக இருந்தாலும் சில பொருட்களை குறிப்பிட்ட நாள் வரையிலே பாதுகாத்து வைக்க முடியும் என்பதால் வெளிநாட்டுக்கு அனுப்புவதில் சிக்கலுள்ளது.

**கேள்வி -** வெளிநாட்டு ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில் புலம்பெயர்ந்த எமது உறவுகள் மட்டும் தான் உங்களுடைய இலக்காக இருக்கிறார்களா ? அல்லது அந்தநாட்டு மக்களும் இவற்றைப் பயன்படுத்துகிறார்களா?

**பதில் -** அவ்வாறில்லை அனைத்து நாட்டிருக்கும் எமது உற்பத்தி போய்ச்சேர வேண்டும் என்பதே எமது குறிக்கோள்.. இங்கு வரும் வெள்ளைகாரர் அதிகமாக எமது உற்பத்தியினை விரும்பி வாங்கி உண்கின்றனர்.

எல்லா நாட்டிலும் எமது உற்பத்தியை கொண்டு சேர்ப்பதற்காக நாம் உழைப்போம். *

# ஒரு புதிய அனுபவத்தை வழங்கும் ........

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தொழிற்சாலையில் பனம் பொருட்களைப் பயன்படுத்திச் செய்யப்ப டும் கைவினைப் பொருட்கள் தயாரிக் கப்படுகின்றன. அதனைவிட, பனங்கட்டி, பனம்பழத்திலிருந்து சவர்க்காரம் போன்வற்றுடன் பனம் பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டுள்ள உணவுகள் உட்பட பல்வேறு பொருட்கள் இங்கு தயா ரிக்கப்படுவதுடன், அவை காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை யும் செய்யப்படுகின்றன.

நெய்தல் நகருக்கு வருபவர்கள் பனம் பொருள் தொழிற்சாலை யில் இடம்பெறும் உற்பத்தி நடைமுறகளையும் நேரில் பார்வை யிட முடியும்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள சிறிய குளங்களில் மீன்பிடிக்க முடியும்.

அதனையடுத்துள்ள பகுதிகளில் பாபி கியூ செய்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றது.

கடற்கரையை அடுத்துள்ள பகுதியில் வட்டக்கொட்டில்கள் அமைக்கப்படவிருக் கின்றன. இங்கு விஜயம் செய்பவர்கள் ஓய் வாக இருந்து பேசிக்கொள்வதற்கும் பொழுதைக் களிப்பதற்காக வும் அங்கிருந்துகொண்டே உணவருந்துவதற்காகவும் இவை அமைக்கப்படவிருக்கின்றன.

ஏற்கனவே பல நிறுவனங்கள் தமது வருடாந்த ஒன்றுகூடல் கள், மற்றும் பிறந்த தின விழாக்களை நடத்துவதற்கு இங்குள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. குறிப்பாக இங்குள்ள மண்டபங்கள், கொட்டகைகள் அவர்களுக்கு வித்தியாசமான அனுபவத்தைக் கொடுப்பதாக இருக்கின்றது.

இங்குள்ள உணவு விடுதி அனை வரையும் கவரக்கூடியது. விடுமுறை இல்லங்களில் தங்கியிருப்பவர்கள் தமக்கு விருப்ப மான உணவுகளை ஓடர் பண்ணினால் அவை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அல்லது உணவு விடுதிக்கே வந்தும் அவர்கள் உணவருந்தலாம்.

சனி, ஞாயிறு தினங்களில் உங்கள் வாய்க்கு ருசியாக ஒடியல் கூழ் தயாரிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணப் பாரம்பரியத்துடன் கடல் உணவுகளையும் உள்ளடக்கியதாக இந்த ஒடியல்கூழ் சனி, ஞாயிறு தினங்களில் கூழ் பிரியர்களான உங்களை மகிழ் விக்க வருகின்றது.

சிறுவர்களை வரவேற்கும் வகையிலான விளையாட்டுக்கள் பலவும் இங்குள்ளது.

இந்த நெய்தல் நகருக்குள் பிரவே சிப்பதற்கு கட்டணம் ஏதாவது அறவிடப்படுமா என்று சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டபோது, பெரியவர்களுக்கு 100 ரூபா வும் சிறுவர்களுக்கு 50 ரூபாவும் அற விடப்படும் என தெரிவிக்கப்பட்டது. விடு முறை இல்லங்க ளில் தம்மை பதிவு செய்து அங்கு தங்கியிருப்பதற்காக வருபவர்க ளுக்கு இந்த பிரவேசக் கட்டணம் இல்லை.

நெய்தல் நகர், அதிலுள்ள பனம் பொருள் தொழிற்சாலை என்பன நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரக்கூடியவை.

வடபகுதியில் உல்லாசப் பயணத் துறையின் வளர்ச்சியில் நெய்தல் கடற்கரை நகர் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமை யும் என நிச்சயமாக நம்பலாம். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பணிகளைக் கவரும் இடங்களில் ஒன்றாக இது வேகமாக மாற்றமடைந்து வருகின்றது. விடுமுறை இல்லங்கள் இன்று திறந்துவைக்கப்படுவது, இதில் முக்கியமான மைல் கல்.

நெய்தல் கடற்கடை நகர் தரப்போகும் புதிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளவும், இங்குள்ள விடுமுறை இல்லங்களில் ஒரிரு நாட்களை மகிழ்வுடன் தங்கிச் செல்வதற்கும் நீங்கள் விரும்பி னால் தொடர்புகொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கம் - 077 727 6818

இணையத்தள முகவரி - neithalbeachcity.com

முகநூலில் பின்தொடர் - https://www.facebook.com/NeithalBeachCity


## குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park



கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



# உலகத் தமிழ் வர்த்தக சங்கம் ஏற்பாட்டில் இந்திய மலேசிய குறுந்தொழில் மாநாடு

## இலங்கை உற்பத்தியாளர்களும் பங்கேற்க முடியும்

உலகத் தமிழ் வர்த்தக சங்கம் எதிர் வரும் ஜூன் இரண்டாம் வாரத்தில் இந்திய அரசு மற்றும் மலேசிய அரசின் சிறு குறுந் தொழில் அமைச்சகத்தின் அனுசரணையு டன் பன்னாட்டு சிறு குறுந்தொழில் மாநாடு (International MSME B2B Meet) மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலும், பேரா மாநிலத்திலும் இரண்டு நாட்கள் நடை பெற உள்ளது.

இந்நிகழ்வில் இந்தியாவிலுள்ள பல் வேறு வர்த்தக சங்கங்கள் வர்த்தகர்கள் 250க்கும் மேற்பட்டோர் மலேசியாவிற்கு வருகை புரிய உள்ளனர். மேலும், மலே சியாவில் உள்ள பல்வேறு மாநில இந்திய வர்த்தக சங்கங்கள், உணவக உரிமையா ளர் சங்கங்கள், சிறுதானிய இறக்குமதி யாளர்கள், ஆடை உற்பத்தி ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், இந்திய பாரம்பரிய மருத்துவ வகைகளான சித்தா, ஆயுர்வேதா, மருந்து வகைகளை இறக்குமதி செய்பவர் கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த சங்காங் கள் ஏற்றுமதி இறக்குமதி தொழில் முனை வோர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.



மலேசிய உலக பெருந்தொழில் ஏற்று மதியில் 40% இறக்குமதியில் 33 % உள்ள இரு நாட்டு வர்த்தகத்தில் சிறு மற்றும் குறுந்தொழிலில் வர்த்தகத்தை அதிகரிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இந்நிகழ்வை உலகத் தமிழ் வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. மேலும், மலேசியாவில் முதன் முதலில் தமிழ் பெண் அமைச்சராக பதவியேற்றுள்ள மாண்புமிகு சரஸ்வதி கந்தசாமி, சிறு மற்றும் குறுந்தொழில் அமைச்சராக பதவியேற்றுள்ள இவ்வேளையில் புதியதாக பொறுப்பேற்றுள்ள மலேசிய பிரதமர் மாண்புமிகு டத்தோ ஸ்ரீ அன்வரும் இந்தியாவுடன் நட்பு பாராட்டி வர்த்தகத்தை மேன்மை அடைய நோக்கத்தில் செயல்படுவதால் சிறு மற்றும் குறுந்தொழில் அடுத்த கட்ட பொருளாதார நகர்விற்கு எடுத்துச் செல்ல உள்ளது.

இந்நிகழ்வை பற்றி அறிந்த பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் தொழிலதிபர்கள், தொழில் வாய்ப்புகளை தேடுவோர் மலே சியாவில் நடைபெறும் பன்னாட்டு சிறு குறுந்தொழில் B2B மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்துள்ளனர் என உலகத்தமிழ் வர்த்தக சங்க தலைவரும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளருமான செல்வக் குமார் தெரிவித்தார். இந்நிகழ்விற்கு கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் (Whatsapp -60166167708) எண்ணிலும் msmeb2b meet@gmail.com மின்னஞ்சலி லும் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித் தார்.

இலங்கையிலிருந்தும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்தும் உற்பத்தியா ளர்கள், வர்ததகர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**Northern Chamber of Industries**

**வடக்கிற்கான தொழிற் துறைகள் மன்றம்**

**வேலைவாய்ப்பு**

**அலுவலக உதவியாளர்**

**Vacancy**

**Office Assistant**


நிறுவனத்தினது நிருவாக உத்தியோகத்தர்களுடன் இணைந்து நிறுவனத்தின் தினசரி நிர்வாகச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஒத்துழைக்கக்கூடிய திறமையான அலுவலக உதவியாளருக்கான பதவி நிலையை நிரப்புவதற்குரிய விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.

**தகைமைகள்**

- வயது எல்லை 20 – 35 வருடங்கள்
- GCE O/L சாதாரண பொதுத்தராதரம் வரையான கல்வி. GCE O/L தேர்ச்சி விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.
- ஆரம்ப நிலைக்கணனி அறிவு
- அடிப்படை அலுவலக உபகரணங்கள் தொலைத்தொடர்பு சாதனங் களை (telephone) இலத்திரனியல் உபகரணங்களை (computer printer, photo copier, scanner) கையாள்வதில் முன் அனுபவம்
- களவேலைகளில் (field work) ஈடுபாடு மோட்டார் வண்டி ஓட்டுந் திறன் அதற்கான லைசன்ஸ்.

பெப்ருவரி மாதம் 15 ந் திகதி பணி நிலையில் அமரும் வகையில் நேர்முகத் தேர்வு இடம் பெறும் பெப்ருவரி மாதம் 10 ந் திகதிக்கு முன்னதாக விண்ணப் பங்களை வேலை வழங்கும் நிறுவனத்துடன் தொடர்பற்ற இரண்டு நடுவர் களுடைய பெயர் (non related Referees) அடங்கிய உங்களது சுயவபரக் கோவையையும் இணைத்து கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Chairman**
**Northern Chamber of Industries**
**No 54, Clock Tower Lane**
**Jaffna**




Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர்

# கால்நடைப் பண்ணைகள் ஏன் தோல்வியடைகின்றன...?

நேர்மையாக செய்யப்படும் எந்த தொழிலும் இலாபத்தை தர சிறிது காலம் எடுக்கும். சமையலை எடுத்துக் கொள்வோம் ஒரு சிறந்த சமையல்காரராக வர ஒருவருக்கு பல வருடங்கள் பிடிக்கும். இதை இப்பிடியும் சொல்லலாம் .ஒருவர் வாய்க்கு ருசியாக சாப்பாட்டை தயார் செய்ய அவருக்கு பல நாட்கள் எடுக்கும். பல தடைவைகள் சமையல் செய்ய வேண்டும். அவரின் சமையலை உண்பவர்களின் ஏச்சுகளை ஏளனங்களை தாங்க வேண்டும். கலவைகளை மாற்றி மாற்றி செய்து தான் சிறந்த கைப்பக்குவத்தை பெற முடியும். ஒரு தச்சு வேலை செய்பவர் அதனை





நீண்ட காலம் தொடர்ச்சியாக செய்யும் போதும் ஒரு கடைக்காரர் தன் வியாபாரத்தை தொடர்ச்சியாக செய்தும் தவறுகளை திருத்தியும் தன் தொழில்களில் தேர்ச்சி பெறுகின்றனர். அதாவது எந்த தொழிலும் இப்படித்தான். அனுபவமும் பொறுமையும் மிக அவசியம். இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் போல ஒரு தொழிலில் உடனடியாக இலாபம் சம்பாதிக்க முடியாது. நான் முன்னுக்கு சொன்னது போல சட்ட விரோத தொழில்களில்தான் உடனடி வருமானம் வரும். ஆனால் கூடவே சட்டச் சிக்கலும் வரும்.

இவ்வளவு நீட்டி முழுங்க ஓர் அறிமுகம் தேவையா என உங்களுக்கு ஐயம் எழலாம். தேவைதான். அண்மை நாட்களாக என் அவதானிப்பில் கால்நடை வளர்ப்பும் இந்த மாதிரி உடனடி வருமானம், இலாபத்தை நம்பி தொடங்கப்பட்டு தோல்வியடைகின்றன. பெருமளவு பணமும் நேரமும் வீணாகுவதை இந்த துறையில் அதிகம் அவதானிக்க முடிகிறது.



ஏனைய தொழில்களை போன்று கால்நடை வளர்புக்கும் இலாபத்தை நோக்கி நகர குறிப்பிட்ட காலம் எடுக்கும். அனுபவம் தேவை. அத்துடன் ஆரம்பத்தில் அதிக முதலீட்டை போட்டு நீண்ட நாட்களின் பின்தான் இலாபத்தை தொட முடியும்.

அண்மை நாட்களில் யூடியூப் போன்ற தளங்களில் வெற்றிகரமான கால்நடை வளர்ப்பு, மாதத்தில் இரண்டு லட்சம் வருமானம், கைநிறைய காசு என பல காணொலிகளை காணமுடிகிறது. இவற்றை பார்த்த பலர் தாங்களும் இந்த மாதிரி கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதை காணமுடிகிறது. அதாவது லட்சக்கணக்கில் உடனடி வருமானத்தைப் பெற.

இதிலும் சிறப்பாக, சிலர் தாங்கள் பார்த்துவரும் நல்ல பணிகளைக்கூட துறந்துவிட்டு ஆடு மாடு கோழி வளர்க்க புறப்பட்டு கையை சுட்டுக் கொள்வதை காண முடிகிறது. இன்னொரு தரப்பு இயற்கை வேளாண்மை முறையையும் இயற்கையோடு இணைந்த கால்நடை வளர்ப்பையும் செய்யப்போகிறோம் என சூறாவளியாக கிளம்பி விளைச்சலும் இல்லை கால்நடையும் இல்லாமல் உற்பத்தியும் இல்லாமல் நிற்கின்றனர். ஆண்டாண்டு காலமாக எங்கள் முன்னோர்கள் செய்த கால்நடை வளர்ப்பையும் இயற்கை வேளான் முறைகளையும் எங்களால் செய்ய முடியாதா ? யாரும் இந்த இயற்கை வேளாண்மை கால்நடை வளர்ப்பில் வெற்றியடையவில்லையா? இயற்கை வேளாண்மையை குறை சொல்ல வேண்டாம் என்று நீங்கள் ஆதங்கப் படுவது புரிகிறது.

பொறுமை பொறுமை. பலர் கால்நடை வளர்ப்பில் வெற்றி கண்டுள்ளனர் என்பதும் பலர் தரமான இயற்கை வேளாண்மையை செய்து பலனடகின்றனர் என்பதும் உண்மை. எனினும் சரியான வேளாண் முறைகளை கடைபிடிக்காமல் அரை வேற்க்காட்டுத் தனமாக செயற்பட்டு வெற்றி பெற்றவர்களை விட பல மடங்கில் முயற்சியாளர்கள் தோற்றுப் போகின்றனர் என்பதால் அதற்குரிய காரணங்களையும் முடிந்தவரை தீர்வுகளையும் இந்த தொடர் ஆராய்கிறது. குறிப்பாக கால்நடை வளர்ப்பு தொடர்பாக ...... விலாவரியாக ஆராய்வோம். பண்ணைகளின் தோல்விக் கதைகளை. காரணிகளை. அவற்றை எப்படி செய்திருந்தால் அவை தப்பிப் பிழைத்திருக்கும் என்பதை......

அதாவது நீங்கள் கால்நடை வளர்ப்பில் வெற்றி பெற்றவர்கள் என்றால் இது உங்களுக்கானது இல்லை யார் யார் இவற்றை செய்து கையை சுட்டுக் கொண்டார்களோ அவர்களுக்கானது. புதிதாக ஈடுபட விரும்புவர்களுக்கானது. இந்த தொழிலை சரியாக அவர்கள் செய்ய துணை புரியும்.



புதிதாக தொடங்கப்படும் பல கால்நடை பண்ணைகளை உற்றுப் பாருங்கள். பாரிய முதலீட்டில் அவை தொடங்கப் படுகின்றன. ஒரு ஐடியல் பண்ணை எப்படி இருக்க வேண்டுமோ சகல விடயங்களும் அந்த பண்ணைகளில் இருக்கும். ஆனால் அந்த பண்ணைகள் சிறிது காலத்தில் தோல்வியடைகின்றன. ஏன் என்று பார்தால் பல அடிப்படை விடயங்களை அந்த பண்ணையை தொடங்கியவர் தவற விட்டிருப்பார்.

உண்மையில் பண்ணையின் உரிமையாளர் பெரும்பாலும் கால்நடை வளர்ப்பு தொடர்பான எந்த வித அனுபவமோ அறிவோ கொண்டிருக்க மாட்டார். வெறும் கேள்வி ஞானம்தான். இல்லாது போனால் லுழரவுரடிந போன்ற இணைய தளத்தில் வரும் உசுப்பல்களையும் இப்படியான பண்ணை தொடங்குபவரின் பணத்தை சுருட்ட காத்திருக்கும் வட்ஸ்அப் குழுக்களின் மாயாஜாலத்தில் மயங்கியவராகவோ இருப்பார்.

குறிப்பாக புலம் பெயர்ந்த தமிழர்கள் பலர் இங்கு பல கால்நடைப் பண்ணைகளை உறவினர்களை மேற்பார்வையாளராக விட்டே தொடங்கியிருப்பர். அந்த உறவினர் வேலைக்கு பலரை நியமித்து பண்ணைகளை பராமரிப்பார்.

குறிப்பாக கனடா, ஐக்கிய ராச்சியம், ஜேர்மனி போன்ற வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்கள் அங்குள்ள மாடுகள் மற்றும் பண்ணைகள் அவற்றின் மூலம் கிடைக்கும் வருமானத்தை பார்த்துவிட்டு அப்படியே இங்கும் அந்த பண்ணைகளை இங்கு தொடங்க எத்தனிக்கின்றனர். அல்லது இங்கு உரிமையாளர்கள் தாங்களே நின்று வளர்க்கும் கால்நடைப் பண்ணைகளின் வெற்றியைப் பார்த்து பண்ணைகளை தொடங்குகின்றனர். என்ன வேலையாட்களை வைத்து. பல பண்ணைகளில் வேலையாட்கள் உணர்வு ரீதியாக அணுகாமல் பணத்தை எவ்வளவுக்கு எடுக்க முடியுமோ எடுக்கும் விதமாக செயற்பட்டு பண்ணையை மூடும் நிலைக்கு கொண்டு வந்து விட்டுள்ளனர். ஏழெட்டு வருடங்களாக இந்த மாதிரி தொடங்கப்பட்ட பல பண்ணகளின் முடிவுகளை அறிந்தவன் என்ற வகையில் ஆதங்கத்துடன் இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

(சரி...தொடருக்குள் செல்வோம்....)



# பாலும் பிளேன்ரீயும் டொலரும்

> இயற்கைப் பசளைப் பாவனையை உச்ச மட்டம் வரையில் அதிகரித்தோமாயின் டொலர் கையிருப்பு நெருக்கடியைக் குறைப்பது மட்டுமல்ல மண்ணின் வளத்தைப் பேணி ஆரோக்கியமுள்ள ஓர் நாட்டையும் கட்டி எழுப்பலாம்.



வேதநாயகம் தபேந்திரன்

"பயிருக்கு இலை, குழை, எருப் போடுதல் பால் குடிப்பதைப் போன்றது. உரம் போடுதல் பிளேன் ரீ குடித்தலைப் போன்றது"

இப்படியொரு அனுபவமொழி மூத்த விவசாயிகளால் கூறப்படுகின்றது.

பால் குடித்தால் உடம்பு பலமாக இருந்து நீண்ட நேரம் வேலை செய்யலாம். பிளேன்ரீ குடித்தால் சிறிது நேரமே உற்சாகம் பெற்று வேலை செய்யலாம். என்ற கருத்திலேயே இப்படியொரு அனுபவ மொழியை மூத்தோர் கூறுகின்றனர்.

இலங்கையின் பொருளாதாரம் டொலர் கையிருப்பு நெருக்கடியால் அத்தியாவசியமான இறக்குமதிகளுக்குக் கூட நிதியில்லாமல் தள்ளாடுகின்றது. இந்த நிலையில் நாட்டின் உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்கத்திற்கு உர இறக்குமதியைச் செய்வதற்கு அரசாங்கம் அந்நிய செலாவணிக் கையிருப்பு இன்றி மிகவும் கஸ்ரப்படுகின்றது.

சராசரி இலங்கையர்களின் வாழ்க்கை முறை விவசாயத்துறையுடன் இணைந்ததாகவே பெருமளவுக்கு இருக்கின்றது.

விவசாய நடவடிக்கைக்கு உரம் தேவையான ஒன்றாகும். ஆனால் உரம் இன்றி இயற்கைப் பசளையில் விவசாயம் செய்த மிக நீண்டதொரு காலப்பகுதி இருந்தது.

இலை,குழை,சருகு, எரு போன்றவற்றை விவசாயத்துறைக்குப் பயன்படுத்தும் வீதத்தை நாம் அதிகரித்தல் மூலமாக டொலர் கையிருப்பு நெருக்கடியைத் தணித்துக் கொள்ளலாம்.

சாதாரணமாக வீடு, வளவு, பொது இடங்களில் இலைகுழை,சருகுகள் இயற்கைப் பசளையாக உபயோகிக்கப்படாது அவை பெருமளவில் அழிந்து போகின்றன. அவற்றைப் பிளாஸ்ரிக்,பொலித்தீன் இன்றித் தூய்மையாகச் சேகரித்து அவற்றை விவசாயத்தில் பசளையாக உபயோகப்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும்.

உள்ளூராட்சி நிறுவனங்களான மாநகர சபை, நகரசபை,பிரதேச சபை போன்றவை இயற்கைப் பசளை தயாரிப்புக்கு இவற்றைச் சேகரிக்கப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தன. ஆனால் பொதுமக்கள் தரப்பில் மிகச் சரியான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை.

பொது இடங்களில் 03 வகையான பிளாஸ்ரிக் கொள்கலன்களை இதற்கென வைத்தார்கள். அதில் கூறப்பட்ட வழிகாட்டுதலுக்கு அமைய கழிவுப் பொருள்களைப் பொதுமக்கள் இடவில்லை. அதனால் இத் திட்டம் தோல்வியடைந்தது.

எந்தவொரு சீர் திருத்தமும் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் ஊடாக முன் வைக்கப்படும் போது வெற்றி பெறும். அவர்களது மனதில் பசுமரத்தாணி போலப் பதியும். அதனைத் தமது பெற்றோரிடம் கட்டாயப்படுத்திக் கூறுவார்கள். பெற்றோரும் தமது பிஞ்சுக் குழந்தை கூறுவதை அடியொற்றிப் பின்பற்றுவார்கள்.

ஆனால் எமது நாட்டில் துரதிஸ்ட வசமாக கொள்கைத் திட்டமிடலாளர்களும் நடைமுறைப்படுத்துவோர்களும் பெருமளவான திட்டங்கள் குறித்துச் சரியாகச் சிந்தித்து நடைமுறைப்படுத்துவது குறைவு.

பனை ஓலைகள் முதன்மையான ஓர் இயற்கைப் பசளையாகும். ஆனால் வடலிகளும், காய்ந்த பனை ஓலைகளும் வீணே கொட்டிக் கிடக்கின்றன. மானிய விலை உரத்துக்குப் பதிவதற்கும் அதனை எடுப்பதற்கும் செலவழிக்கும் நேரத்தில் ஒரு அரைப் பங்கு நேரத்தை இதற்குச் செலவழித்தால் பணமும் மிச்சமாகும். மண்ணும் நல்ல வளம் பெற்று பயிர்களின் விளைச்சலும் தரமாகவும் உச்சமாகவும் இருக்கும்.

இயற்கை வளங்கள் கொட்டிக் கிடக்கும் எமது நாட்டின் வரலாறு ஏழ்மையில் கழிவதற்கு சுயநலமில்லாத சர்வாதிகாரத் தலைவர் ஒருவர் உருவாகாமையே காரணம்.

பொருளாதாரப் பேரிடர் உருவாகும் போது அவசரம் அவசரமாக நாட்டின் அபிவிருத்தி பற்றிக் கதைப்பார்கள்.

நிலைமை சற்றுத் தணிந்ததும் அவ்வளவு தான்.

இன்று நாட்டை அச்சுறுத்தும் பிரச்சினைகளில் ஒன்று சிறுநீரக நோயாளிகளின் அதிகரித்த எண்ணிக்கையாகும்.

அளவுக்கு மிஞ்சிய உரப் பாவனை மூலமாகவே இந்த நிலைமை பெருமளவில் தோற்றுவிக்கப்பட்டது.

இயற்கைப் பசளைப் பாவனையை உச்ச மட்டம் வரையில் அதிகரித்தோமாயின் டொலர் கையிருப்பு நெருக்கடியைக் குறைப்பது மட்டுமல்ல மண்ணின் வளத்தைப் பேணி ஆரோக்கியமுள்ள ஓர் நாட்டையும் கட்டி எழுப்பலாம்.



ஆனந்தன் பிறேமானந்
லக்சி பாம்

# இலாபம்தரும் முருங்கை பயிர்ச்செய்கை

முருங்கையின் அறிவியல் பெயர் மோரிங்கா ஓலிஃபெரா என்பதாகும். முருங்கைமரம் மோரிங்கேசே என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது.

முருங்கையின் தாயகம் இந்தியா வாகும் தற்பொழுது இலங்கை, பாகிஸ் தான், வங்காளதேசம், தாய்லாந்து, தைவான், பிலிபைன்ஸ் மற்றும் ஆப்பி ரிக்கா, தென்அமெரிக்கா நாடுகளிலும் முருங்கை பயிர் செய்யப்படுகிறது.

முருங்கை வறட்சியை தாங்கும் பயிராகும். ஆகையால் அதிகளவான நீர் தேவை ஏற்படாது. செலவில்லாமல் முற்று முழுதாக இயற்கையான முறையில் உற்பத்தி செய்து அதிக லாபம் ஈட்ட முடி யும்.

முருங்கையை பொறுத்தவரை அதி களவான நீர் பயன்படுத்தினால் வேர் அழுகல் போன்ற நோய்கள் வர வாய்ப் புள்ளது.

பல வீடுகளில் தென்னை மற்றும் வாழைக்கு அடுத்தபடியாக முருங்கை மரம் உள்ளது இருப்பினும் தமது வீட்டுத் தேவைக்காக மட்டுமே பயன் படுத்துகின் றார்கள்.

வியாபார நோக்கத்திற்காக உற்பத்தி செய்யும் பண்ணையாளர்கள் மிகக் குறைவு.

அதிக லாபம் ஈட்டும் தொழில்களில் முருங்கை பயிர்ச்செய்கையும் ஒன்று என்பதனை நம் மக்கள் புரிந்து கொள் வதில்லை.

வர்த்தக நோக்கத்தில் முருங்கை நடுவதாக இருந்தால் ஏக்கருக்கு இரண்டு டன் தொழுவுரம் இட்டு இரு முறை உழவு செய்ய வேண்டும்.





ஒரு ஏக்கருக்கு 200 கிராம் விதை தேவைப்படும். விதை நடவு செய்வதற்கு முன்பு தண்ணீரில் ஊறவைத்து பிறகு நடவு செய்தால் முளைப்புத்திறன் நன் றாக இருக்கும்.

முருங்கை கன்றுகளை யாரிடமாவது வாங்கி நட விரும்பினால் பதியம் வைத்து குறைந்தது ஒரு அடி வரை வளர்ச்சி அடைந்த கன்றுகளை வாங்கி நடவேண் டும்.

கன்றுகளை நடும் பொழுது 1x1x1.5 குழி எடுத்து ஒவ்வொரு குழிக்குழ் ஒரு கிலோ எருவுடன் 50g சாம்பல் கலந்து இட்டு 18 x 18 அடி இடைவெளியில் முருங்கை கன்றுகளை நடவு செய்து சொட்டுநீர் பாசனமுறையை பயன் படுத்தலாம்.

ஏக்கருக்கு 144 கன்றுகள் வீதம் நடவு செய்யலாம்

கன்றுகளின் வளர்ச்சியை அதிகரிக்க அமிர்த கரைசலோடு வேப்பெண்ணெய் கலந்து பயன்படுத்தலாம்

கன்றுகள் மூன்று அடி வளர்ந்து வரும் போது குறித்த நுனி பகுதியை கிள்ளி விட வேண்டும். இவ்வாறு செய்வதனால் கந் துகள் நன்றாக படர்ந்து அதிக பக்கக்கந் துகளுடன் இருக்கும். உயரமாகவும் வள ராது.

சொட்டு நீர் பாசனம் செய்திருந்தாலும் அடிக்கடி நீர் பாய்ச்ச வேண்டிய அவசிய மில்லை. 8 மாதத்திலேயே காய் வந்து விடும். தொடர்ந்து 5 வருடங்கள் வரை காய்வரும். பூச்சி, புழு தென்பட்டால் இயற் கையாக உருவாக்கப்பட்ட பஞ்சகாவியா மற்றும்கற்பூர கரைசலை பயன்படுத்தலாம்.

அதோடு முருங்கையை பொறுத்த வரை ஒரு சில காலப்பகுதியில் மயிர் கொட்டி என்று சொல்லப்படும் புழுக்கள் அதிகளவில் காணப்படும் இச் சமயத்தில் சாம்பல் தூவி வந்தால் ஓரிரு வாரத்தில் முற்றாக அழிந்து விடும். முருங்கை பூ பூக்கும் சமையத்தில் தண்ணீர் பாய்ச்சு வதை குறைக்க வேண்டும்.

அதோடு காலை வேளையில் எந்த வொரு வளர்ச்சி ஊக்கியையும் தெளிக்கக் கூடாது அவ்வாறு தெளித்தால் அயன்மக ரந்த சேர்க்கை பாதிக்கப்பட்டு விளைச்சல் குறையும்.

முருங்கை பூ பூக்கும் சமையத்தில் ஒரு லிட்டர் தயிரையும் ஒரு லிட்டர் தேங் காய் பாலையும் ஒரு பாத்திரத்தில் கலந்து 7 நாட்கள் நிழலான இடத்தில் வைத்தி ருந்து. எட்டாவது நாள் வடிகட்டி எடுத்து. 14 லிட்டர் தண்ணீரை இவற்றுடன் கலந்து தெளிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் பூக்கள் உதிர் வது குறைந்து அதிகமான பூக்கள் பூக்க ஆரம்பிக்கும்.

முதல் அறுவடையில் விளைச்சல் சற்று மந்தமாக இருக்கும். இரண்டாவது அறுவடையில் இருந்து 5 - 7 டன் வரை விளைச்சல் இருக்கும்.


முருங்கை நட்டவர் வெறுங்கையோடு போவார் என்பது பழமொழி.

இதன் அர்த்தம் ஒரு சிலருக்கு புரிவ தில்லை.

(முருங்கை நட்டவர் வயது முதிர்ந்த காலத்தில் பொல்லூன்றாமல் தனியாக நடந்து செல்வார் என்பதே நம் முன்னோர் களின் கருத்தாகும்)


**குறிப்பு**

முருங்கை காயாக இருக்கட்டும் கீரை களாக இருக்கட்டும் எமது நாட்டைப் பொறுத்தவரை சந்தை வாய்ப்பு அதிக மாகவே உள்ளது.



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

# சண்முகத்தார் ஒரு சங்கதி கேட்டியளோ..?



## அடுப்படிப் பொருளாதாரம்



எங்கட ஆச்சி முந்தி நெடுகவும் அம்மியில அரைச்சுத்தான் கறி வைப்பா. மல்லி மிளகாயை அம்மியிலை அரைச்சுப்போட்டு பேந்து தேங்காய்ச் சொட்டை சின்னன் சின்னனா உடைச்சு அதோடை சேத்து இழுத்து அரைச்சு நல்ல விழுதா உருட்டி எடுத்து வைக்கிற கறியள் வலு உருசை கண்டியளோ. அரைச்சு வைக்கிற வெள்ளைக் கடல் மீன், நண்டு, இறால் கறியள் முருங்கைக்காய் பிரட்டல் கறி எண்டால் தனி உருசை. அதிலும் கொஞ்சம் கூனி இறால் போட்டு அரைச்சு வைக்கிற முருங்கைக்காய் கறியை அடிக்க ஆளே கிடையாது எண்டுதான் சொல்லுவன். ஆச்சி முருங்கைக்காய் பால் கறி வைக்கேக்கையும் அம்மியிலை கூடு அரைச்சு எடுத்துத்தான் வைப்பா. ஆச்சி அரைச்சு வைக்கிற வெள்ளைக் கடல் கயல்மீன் குழம்பும் இல்லாட்டால் மணலை மீன் குழம்பும் மொட்டைக்கறுப்பன் அரிசிச் சோறும் தாற அந்த உருசையை எந்தப் பெரிய ஹோட்டலிலும் எவ்வளவு குடுத்தாலும் ருசிக்கேலாது. உப்பிடி அரைச்சு வைக்கிற குழம்பு கொதிக்கேக்கை வாற மணமே ஆக்களுக்கு வாயிலை எச்சில் ஊற வைக்கும். அதுகும் உந்த மணம் வேலிக்கு மேலாலை மட்டைக்காலுக்காலை எண்டு பூந்து வெளிக்கிட்டு ஒழுங்கை எல்லாம் போய் வரும். அப்பிடி போய் வரேக்கை ஒழுங்கையிலை போறவை வாறவைக்கு எல்லாம் வாயில எச்சில் ஊறும்.

அது மாதிரி ஆச்சி அம்மியில அரைக்கிற இஞ்சிச் சம்பலுக்கு கொஞ்ச ஊர் நல்லெண்ணையும் ஊத்திக் குழைச்சு எடுத்தால் சோத்தைச் சாப்பிட வேற கறி ஒண்டும் தேவைப்படாது. அத மாதிரி பழஞ்சோத்துக்கும் உந்த அம்மியிலை அரைச்ச சம்பல் போட்டு ஆச்சி குழைச்சு உருண்டை உருண்டை ஆக்கித்தர பூவரசம் இலையிலை வாங்கித் திண்டு முடிய குழைச்ச சட்டியையும் வழிச்சுத் துடைச்சு நக்கிப்போட்டுத்தான் மற்ற வேலை பாப்பம். சில வேளை உந்த சட்டி நக்குறதுக்கு ஆர் நக்கிறது எண்டு சண்டையும் வரும் .அதை மாதிரித்தான் பிள்ளைபெத்த பெண்டுகளுக்கும் சாமத்தியப்பட்ட பெட்டையளுக்கும் முந்தி இஞ்சி, சாறணை, உள்ளி, மிளகு, மல்லி , நற்சீரகம் எல்லாம் போட்டு அம்மியில அரைச்சு பத்தியக்கறி வைச்சுக் குடுப்பினம். அப்பதான் வயித்துப் புண் மாறும் எண்டு ஆச்சி சொல்லுறவ.

உத மாதிரி ஆற்றையும் வீட்டில பிள்ளைப்பெத்து வரப்போகுது எண்டால் மருந்துக்கடையளிலை ஊறல் சரக்கு வாங்கியந்து வெய்யில்லை காய வைச்சு காஞ்ச அம்மியிலை அரைச்சு எடுத்து சாராயப்போத்தில் வாங்கி அதுக்குள்ளை உந்த ஊறல் சரக்குத்தூளைப் போட்டு மூடி நெல்லுச்சாக்குக்குள்ளை ஒரு ஆறுமாதம் வைப்பினம். பிள்ளைப்பெத்தவைக்கு அவை அண்டண்டைக்கு தோஞ்சதும் உந்த ஊறலிலை கொஞ்சம் ஊத்திக்குடுக்க அவை மூக்கைப் பொத்திக் கொண்டு குடிப்பினம். உந்த அரைச்சபத்தியக்கறியும் உந்த ஊறலும் கைகண்ட மருந்து பிள்ளைப் பெத்த பெண்டுகளுக்கு இருக்கிற எல்லா நோக்களும் பலகீனமும் இருந் இடம் தெரியாமல் ஓடிப்போகும் எண்டு ஆச்சி சொல்லுவா.

அதமாதிரி அம்மியில இருந்து அரைக்கிறது கை, கால், இடுப்பு, முதுகு, நெஞ்சுக்கு நல்ல பயிற்சி எலும்புகளும் தசையளும் நல்ல பலமா வரும் எண்டு ஆச்சி சொல்லுவா. அதோட அம்மியிலை குந்தி இருந்து அரைச்சா பெண்டுகள் ரெண்டொரு முக்கலோடை வலு சுளுவா ஆக்கினை வேதினை ஒண்டும் இல்லாமல் பிள்ளைப்பெறலாம் எண்டுவா. டாக்குத்தர்மார் ஆசுப்பத்திரி எண்டு அலைஞ்சு திரிஞ்சு வயித்தை வெட்டி காசையும் கரியாக்கத் தேவையில்லை கண்ட கிண்ட வருத்தம் வாதையளையும் வாங்கத் தேவையில்லை எண்டுவா. அதிலும் நெடுக அம்மியில அரைக்கிற பெண்டுகளுக்கு பிள்ளைப் பெறுகிற காலத்தில நல்லாப்பால் சுரக்கும் எண்டு சொல்லுவா. எங்கட அம்மா கோவிந்தி பள்ளிக்கத்தில அரிவரி படிக்கேக்கை பள்ளிக்கம் போக முந்தியும் பேந்து பள்ளிக்கத்தால வந்த பிறகும் பால் குடிச்சவ எண்டு ஆச்சி பெருமையாச் சொல்லுவா. அது மாதிரி அம்மியில நெடுக அரைச்சா உந்தப் பெண்டுகளுக்கு நெஞ்சில வாற கண்ட வருத்தம் ஒண்டும் வராது வெட்டுற அறுக்கிற வேலை ஒண்டும் வராது எண்டு சொல்லுவா.

ஆச்சி உப்பிடிச் சொன்னதிலையும் ஒரு உண்மை இருக்கத்தான் செய்யுது. ஏனெண்டால் முந்தி அம்மியிலை அரைச்சு ஆட்டுக்கல்லிலை அரைச்சு உரலிலை நெல்லுக்குத்தி மா தூள் இடிச்சு கிணத்திலை தண்ணி அள்ளிக் குடத்திலை காவியந்த திருவலையில குந்தி இருந்து திருவின ஆக்கள் விடியக்காலமையே எழும்பி வயல் வேலை ஆட்டடி மாட்டடி வேலை எண்டு செய்த ஆக்கள் எல்லாம் கண்ட கிண்ட வருத்தம் எண்டு ஆசுப்பத்திரியளுக்குப் போறது குறைவு. அவை ஒருத்தரும் பாயிலை கிடந்தது இழுபட்டது வலு குறைவு எண்டு நான் சொல்லுறதை எல்லாரும் ஏற்றுக்கொள்ளுவியள் . இப்ப நாகரீகம் முத்திப்போய் காசு பணம் புழக்கம் கூடி சனத்துக்கு வீடுவழியை வேலை செய்யப் பஞ்சி . எல்லாத்துக்கும் கண்டறியாத மிசின்களை வாங்கி வைச்சு வேலை செய்யினம். உண்ணானச் சொன்னால் தின்னுறது குடிக்கிறது பெய்யிறது பேலுறது படுக்கிறது எழும்பிறது மட்டுந்தான் எங்கட ஆக்கள் கனபேர் இப்ப தங்கட பாட்டிலை செய்யினம் மாற்றும்படி எல்லாம் மிசிந்தான் செய்யுது . உதாலதான் அவைக்கு கண்ட கிண்ட வருத்தங்கள் எல்லாம் வந்து சீக்காளியளாகி டாக்குத்தர்மாருக்குப் பின்னாலை திரியினம். சில வேளை உதுகளுக்கும் மிசின்கள் வந்தா வாங்கிகிப்போட்டுப்போட்டு பேசாமல் இருப்பினம் போல. சுருக்கமாச் சொன்னா முந்தி எங்கட வீட்டுக்கு வீடு ஜிம் இருந்தது இப்ப வீட்டுக்கு வீடு ஜிம்முக்குப் போகினம். *

இவ் வாரஇதழ் நல்லூர், இல.68, குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.02.2023இல் வெளியிடப்பெற்றது.